# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

கார்த்திகை - மார்கழி 2016 நிலா **சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு** இல. 42




## 2017 ஜனாதிபதி தேர்தல் :
## களத்தில் குதிக்கிறார் மக்ரோன்!

எதிர்பார்ப்புகள், ஊகங்கள் எனக் கடந்த பலமாதகாலமாக தொடர்ந்த புதிருக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் Emmanuel Macron. முன்னாள் பொருளாதாரத்துறை அமைச்சரும் En Marche! அரசியல் இயக்கத்தின் தோற்றுவிப்பாளருமான Emmanuel Macron, *2017* அதிபர் தேர்தலில் வேட்பாளராக அதிகாரபூர்வமாக தன்னை அறிவித்துள்ளார்.

Macronன் பிரான்ஸ் அதிபர் பயணம் மிகவும் நுணுக்கமாகவும் துல்லியமாகவும் தயார்செய்யப்பட்டு சரியான தருணத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது என்பது அரசியல் துறையினரின் கருத்தாகவுள்ளது.

அனைத்து வகையான அமைப்புமுறை அரசியலுக்கும் நான் எதிரானவன். எனது அரசியல் முன்னெடுப்புகள் இதுவரை பிரான்சில் நடந்து வரும் சம்பிரதாய அரசியல் செயற்பாடுகளிலிருந்து வேறுபட்டேயிருக்கும் எனத்தெரிவித்துள்ள Macron நான் இடதுசாரி வேட்பாளராகவோ அல்லது வலதுசாரி வேட்பாளராகவோ களமிறங்கவில்லை.



Thomas Pesquet

## விண்வெளியில் ஒரு சாதனையாளர்

பக்கம் : 3

நான் பிரான்சிலுள்ள அனைத்து மக்களினதும் வேட்பாளர். தற்போதைய பிரான்ஸ் அரசியல் தலைமைகளின் வழிநடத்தலினால் மனம் சோர்ந்து போயிருக்கும் ஒவ்வொரு பிரான்ஸ் குடிமகனினதும் வேட்பாளர். எனது இன்றைய சவால் இடதுசாரிகளை என் பின்னால் ஒன்று சேர்ப்பதோ அல்லது வலதுசாரியினரை ஒன்று சேர்ப்பதோ அல்ல. மாறாக அனைத்து பிரான்ஸ் மக்களையும் ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைப்பதேயாகும் என மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவரை En Marche! இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு இலட்சம் அங்கத்தவர்களே தனது நம்பிக்கை என தனது அங்கத்தவர்களில் நம்பிக்கை வைக்கும் Macron, மேலும் செயற்பாட்டாளர்களையும், அங்கத்தவர்களை யும் ஒன்று திரட்டும் வகையில் தமது En Marche! தலைமை அலுவலகத்தை பாரிஸ் 15ற்கு புதிதாக இடம் மாற்றியுமுள்ளார்.

- தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துவிட்டாலும் Macron இன் எதிர்காலம் ஒரு உறுதியற்ற நிலையிலேயே அமைந்துள்ளதாக அரசியல்



## பிரான்சின் இலக்கிய மாமணி விருது பெறும்

Leila Slimani

பக்கம் : 4


நிலா
www.nilafrance.com

தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94 sangeethafrance@gmail.com

ஆய்வின் மறுபக்கம் தெரிவிக்கின்றது.

● 500 பிரதிநிதிகளின் ஆதரவுக் கையொப்பங்கள் பெறவேண்டும். இடது, வலது கட்சிச்சார்புகள் கிடைக்க வாய்ப்பில்லை. ஒரு குறிப்பிட்ட அளவு பாராளுமன்ற உறுப்பினர்களே இவரின் பின்னால் உள்ளனர். ஆகையினால் 500 கையொப்பங்கள் என்பது கடினமான செயற்பாடுதான்.

● இன்றுவரை தீவிர முன்னெடுப்புகளுக்குப் பின்னர் 2.8 மில்லியன் யூரோக்கள் மட்டுமே Emmanuel Macronஆல் சேகரிக்க முடிந்துள்ளது. ஆனால் தேர்தல் பிரச்சாரங்களுக்காக தேவைப்படுவதோ இன்னும் பல மில்லியன்களாகும்.

● மற்றைய அரசியல் கட்சி வேட்பாளர்களின் திட்டங்கள் ஓரளவு அனைவரும் அறிந்ததே. ஆனால் Macron இன் திட்டங்கள் என்ன, வாக்குறுதிகள் என்ன என்பது எவருக்கும் தெரியாது. ஆகவே அவற்றையும் வெகுவிரையில் விரிவாக வெளியிட வேண்டியுள்ளது.

● இவற்றையெல்லாம்விட முக்கியமாக அரசியல் ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுவது, Emmanuel Macron தனது ஆசானான அதிபர் பிரான்சுவா ஹொலந்தை எதிர்த்து போட்டியிடுவதேயாகும். ஓர் உயர் அரச அதிகாரியாக பணியாற்றி வந்த Macronஐ தனது Élysée செயலாளராக்கி, அமைச்சராக்கி அரசியல் பரப்பில் பிரபலமாக்கிய பெருமை அதிபர் ஹொலந்தையே சேரும். இன்று அதிபர் தனது இரண்டாவது ஆட்சிக் காலத்தை தெரிந்தெடுக்கின்றாரா இல்லையா என்பதை அறியும் முன்னரே தன்னை வேட்பாளராக அறிவித்துள்ளமை ஒரு துரோகமாகக் கருதப்படுகின்றது.



பிரான்சின் அதிபராவது ஒன்றும் இத்தனை இலகுவான விடயமில்லை எனத் தெரிவித்துள்ள பிரதமர் மனுவல் வால்ஸ் பிரான்சின் அதிபராவதற்கு பிரபலம் மட்டும் போதாது சரியான அரசியல் தகுதிகளும் வலிமையும் தேவை எனத் தெரிவித்துள்ளார்.



தற்போதைய நிலையில் Emmanuel Macronஇன் வேட்பாளர் அறிவிப்பு பிரான்சின் மற்றைய அரசியல் தலைவர்கள் மத்தியிலும் பெரும் அழுத்தங்களைக் கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. Les Republicains கட்சியின் Alain Juppé முதல் சோசலிச கட்சியின் Arnaud Montebourg வரை தமது எதிர்வினையையும் ஐயப்பாடுகளையும் பதிவு செய்துள்ளனர். கல்வித்துறை அமைச்சர் Najat Vallaud - Belkacem தனது கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார். Macron இன் வேட்பாளர் அறிவிப்பு தன்னைக் கோபத்திற்குள்ளாக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதிபர் பிரான்சுவா ஹொலந்த் முன்னெடுத்துள்ள அனைத்துத் திட்டங்களையும் சரிவர அமுல்படுத்த அவருக்கு இன்னுமொரு ஆட்சிக்காலம் தேவைப்படும். அதற்கான முயற்சியில் அதிபர் இருக்கும் பட்சத்தில் Macronஇன் இச்செயற்பாடு மிகவும் நியாயமற்றது எனவும் இந்நிலையால் வாக்குகள் அனைத்தும் பிரிந்து சோசலிசக் கட்சியினர் தேர்தலின் இரண்டாம் சுற்றில் நுழைய முடியாத நிலை ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளார்.







## பிரான்ஸ் அரசியலில் எனக்கு இடமில்லை

பிரான்ஸ் மக்களே! நான் எப்போதும் ஒரு பிரான்ஸ் நாட்டவனே! பிரான்ஸ் மக்களின் இன்ப துன்பத்தில் எப்போதும் நான் பங்காளியாகவே இருப்பேன் 'Bonne chance à la France' என வாழ்த்துக்கூறி அரசியலிலிருந்து விலகுகிறார் பிரான்சின் முன்னாள் அதிபர் நிக்கொலா சார்க்கோசி.

நீண்ட மாதங்களாக சூடுபிடித்து வந்த வலதுசாரிக் கட்சியினரின் 2017 பிரான்ஸ் அதிபர் தேர்தல் வேட்பாளரை தெரிந்தெடுப்பதற்கான முதற்சுற்று நவம்பர் 20ம் திகதி நடைபெற்றது. யாருமே எதிர்பாராத வண்ணம் நிக்கொலா சார்க்கோசி கடுமையான தோல்வியைச் சந்தித்துள்ளார்.

இம் முதற்சுற்றில் சார்க்கோசியின் ஆட்சிக் காலத்தில் பிரதமராக இருந்த François Fillon, போர்தோ நகரசபைத் தலைவர் Alain Juppé, Nathalie Kosciusko – Morizet. Bruno Le Maire, Jean Fréderic Poisson மற்றும் François Copé ஆகியோர் பங்குபற்றினர்.

4.1 மில்லியன் மக்கள் வாக்களித்த முதல் சுற்றில், François Fillon 44.1 சதவீத வாக்குகள் பெற்று முதலாவது இடத்தையும் 28.5 வாக்குகளுடன் Alain Juppé இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளனர். நிக்கொலா சார்க்கோசி 20.6 சதவீத வாக்குகளுடன் பிரான்ஸ் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளார். மோசமான தோல்வியைத் தொடர்ந்தே, நிக்கொலா சார்க்கோசி, தான் அரசியலிலிருந்து விலகுவதாகவும் தொடரும் தேர்தல் களத்தில் தனது ஆதரவு François Fillonஇற்கே எனவும் கூறி விடைபெற்றுள்ளார். இன்று 61 வயதாகும் சார்க்கோசி 40 வருடகாலம் பிரான்சுக்காக சேவை செய்துள்ளார் எனத் தெரிவித்த சார்க்கோசியின் இளைஞர் அணிப் பொறுப்பாளர் Marié Agnès Kikano, 2012ல் கை நழுவிப்போன அதிபர் பதவியை மீளப்பெறுவதற்கான நீண்ட ஆயத்தங்கள் கை நழுவியுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். ●

சங்கீதா அச்சகம்
39, Bd. de la Chapelle
75010 Paris
M°: La Chapelle
sangeethafrance@gmail.com
Tél. / Fax :
01.44.72.08.94



## Thomas Pesquet

# விண்வெளியில் ஒரு சாதனையாளர்

**ஐரோப்பாவைப் பொறுத்தவரை விண்வெளி வீரராவது அத்தனை இலகுவான விடயமல்ல. 15 வருடங்களுக்கு ஒருமுறைதான் தேர்வே நடக்கிறது!.**

**2008 இற்கு பின்னர்** பிரான்சிலிருந்து ஒரு விண்வெளி வீரர் விண்வெளியில் உலாவர இருக்கிறார். பிரான்சின் வடமேற்குப் பகுதியான Rouen யைச் சேர்ந்த, இன்று 38 வயதாகும் Thomas Pesquet நீண்ட 7 வருட கடினமான பயிற்சிகளுக்குப் பின்னர், 15 நவம்பர் 2016ல் விண்வெளிக்கு பயணித்துள்ளார். 6 மாதப் பணிக்காக பயணிக்கும் இவர் ஐரோப்பாவைப் பொறுத்தவரை மிக இள வயதினரும் பிரான்சின் 10வது விண்வெளி வீரரும் என்பது குறிப்பிடத்தக்கது.

**'பூமியில் இருப்பதற்கு மேலான தகுதியுடையவர்"** என ஊடகங்களால் பெருமைப்படுத்தப்பட்டுள்ள Thomas Pesquet சிறுவயது முதல் கல்வியை ஆர்வமாகத் தொடர்ந்தவர். அவர் வயது இளைஞர்களெல்லாம் இளமையை அனுபவிக்க Thomas தனது 23வது வயதில் வானூர்தி அறிவியல் (Aéronautique) பொறியியலாளராக வெளியேறினார். அங்கும் சிறப்புத் தகமையாக செயற்கைக்கோள் வடிவமைப்பு மற்றும் கட்டுப்பாடு போன்றவற்றில் அதீத தகமையும் பெற்றார். ஆறு மொழிகளை சரளமாகப் பேசக்கூடியவர்.

ஐரோப்பாவைப் பொறுத்தவரை ஒரு விண்வெளி வீரராவது என்பது அத்தனை இலகுவான விடயமல்ல. 15 வருடங்களுக்கு ஒருமுறைதான் தேர்வே நடக்கும். தனது கனவுகளைக் கலைத்துவிடாமல் Air France இல் விமானியாக சிறிது காலம் பணியாற்றினார்.

விமான ஓட்டுனர் பணி என்பது உலகின் சிறப்பான தொழில்கள் வரிசையில் இரண்டாவது இடத்திலுள்ளது. முதலாவது இடம் பியர் சுவைத்து தரம் சொல்லுதலிற்கே.

பூமிப்பந்திலிருந்து 400 கிலோமீற்றர் தூரத்தில் பூமியைச் சுற்றி வரும் விண்கலத்தில் அவரின் 6 மாதப்பணி தொடரவுள்ளது. இவ் விண்கலம் பூமியிலிருந்து 400 கிலோமீற்றர் தூரத்தில் மணிக்கு 28 ஆயிரம் கிலோமீட்டர் வேகத்தில் சுற்றிவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்வெளியிலிருந்து பூமிப்பந்தின் அரசியல் பிரிவினைகளற்ற, எல்லைகளற்ற முழு உருவத்தையும் காண ஆவலாகவுள்ளேன். எனது இந்தப் பயணம் இளம் வயதினர் மத்தியில் சாதகமான, நேர்மறைச் சிந்தனைகளை விதைக்குமாயின் அதுவே எனது பயணத்தின் வெற்றியுமாகும் என்கிறார் Thomas Pesquet.

Thomas Pesquet தனது 6 மாதகாலப் பயணத்தில் 200 விதமான பரிசோதனைகளை விண்வெளியில் நடாத்தப்போகின்றார். அதிகமான ஆய்வுகள் மனித உடல் நலம் குறித்ததாகவே உள்ளன. சர்வதேச சுகாதார மையம் மற்றும் மருத்துவ ஆய்வாளர்களுக்காகவே அனைத்து ஆய்வுகளையும் மேற்கொள்ளவுள்ளார்.

குறிப்பாக மனிதனின் தூக்கம், எலும்புகளின் ஆயுட்காலம், இரத்த நாடிகளின் ஆயுள் என்பன முக்கியமானவை.

கடினமான 7 வருட உடல், உளப்பயிற்சிகளுக்கு அப்பால் விண்வெளியில் 6 மாதங்கள் என்பது, மனிதனின் உடலில் 10 முதல் 20 வருட முதுமையை ஏற்படுத்தும். 38 வயதில் பயணத்தைத் தொடங்கும் Thomas 6 மாதங்களின் பின் பூமிக்குத் திரும்பும்போது 50 வயது மனிதனின் இரத்த நாடிகளின் முதுமையோடு திரும்புவார் என்பது குறிப்பிடத்தக்கது.

Thomas Pesquet உடலில் அணிந்திருக்கும் ஆடைகளில் பொருத்தப்பட்டுள்ள நுண் கருவிகள் அவரின் உடலில் ஏற்படும் அனைத்துவிதமான மாற்றங்களையும் பூமிக்கு அனுப்பிய வண்ணமிருக்கும் எனவும் இத்தரவுகள் எமது தேடல்களில் கூடுதல் முன்னேற்றங்களைக் கொடுக்கும் எனவும் மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

20 மில்லியன் சக்தி கொண்ட ரஷ்யத் தயாரிப்பான விண்கலம் Soyouz கசகஸ்தானிலிருந்து 48 மணி நேரப்பயணத்தில் விண்ணுக்குப் பாய்ந்துள்ளது. என்னதான் நாம் விண்வெளிக்குச் செல்பவர்கள், விஞ்ஞானிகள் என்றாலும் நாமும் பல சம்பிரதாயமான செயற்பாடுகள், சடங்குகளைப் பின்பற்றுபவர்களாகவே உள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். குறிப்பாக விண்வெளிக்குச் செல்லும் அனைவரும் செல்வதற்கு முன்னர் ஒரு மரத்தை ஞாபகார்த்தமாக நடவேண்டும். இச்சடங்கு விண்வெளிக்குப் பயணித்த முதலாவது மனிதரான சோவியத் யூனியனைச் சேர்ந்த யூரி ககாரின் (1961) முதல் தொடர்கின்றது.

– நாம் தங்கியிருக்கும் Hôtel de Cosmonautes அறைக்கதவில் எமது ஞாபகார்த்த கையொப்பம் இடவேண்டும்.
– பயணிப்பதற்கு முதல் நாள் இரவு 1969ல் வெளியான ரஸ்ய வெஸ்டர்ன் திரைப்படமான Le Soleil blanc du désert கட்டாயமாக காண்பிக்கப்படும்.
– பயணிக்கும் முன்னர் விண்கலத்தை நோக்கிச் செல்லும் வழியில் ஒரு பஸ் சக்கரத்தில் சிறுநீர் கழிக்க வேண்டும். பெண்கள் என்றால் ஒரு போத்தல் தண்ணீரை ஊத்த வேண்டும். இச் சடங்கும் யூரி ககாரின் ஆரம்பித்து வைத்ததுதான் எனத்தெரிவித்துள்ளார். மேலும் நாம் விண்வெளிக்குச் செல்கின்றோம், எமது பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டுமாயின் பூமியில் செயற்படும் பல நூறு மனிதர்களின் உதவி இல்லாமல் ஒரு போதும் முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.






இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

## ‘கலங்கி நிற்கும் பெற்றோர்களுக்கான’ நூலாசிரியருக்கு

# பிரான்சின் இலக்கிய மாமணி விருது



இரட்டைக் கொலை செய்யும் குழந்தைப் பராமரிப்பாளரை மையப்படுத்தி எழுதிய நூலின் நாவலாசிரியருக்கு பிரான்சின் இலக்கிய மாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. பிரான்சின் அதி உயர்ந்த இலக்கிய விருதான Goncourt என்ற இந்த விருது மொறோக்கோவைப் பிறப்பிடமாகக் கொண்ட நாவலா சிரியர் Leila Slimaniக்கு வழங்கப்பட்டுள்ளது. **"கலங்கி நிற்கும் பெற்றோர்களுக்கான"** இந்த நூல் வாசிப்பாளர்களை பயத்தில் உறைய வைக்கும் திடுக்கிடும் நாவல் என வர்ணிக்கப்பட்டுள்ளது.

தான் பராமரிக்கும் இரு குழந்தைகளையும் கொலை செய்யும் ‘சிறந்த' செவிலித்தாயின் திடுக்கிடும் கதையே «Chanson douce» என்ற இவரது நாவல் ஆகும். «Chanson douce» என்பதை ஓரளவுக்கு மொழிபெயர்த்தால் ‘இனிமை யான பாடல்' எனப் பொருள்படும். நியூயோர்க்கில் 2012இல் இரட்டைக் கொலை செய்து வழக்கை எதிர்நோக்கியிருக்கும் டொமினிக்கன் நாட்டை சேர்ந்த குழந்தைப் பராமரிப்பாளர் ஒருவரின் உண்மைக் கதையை அடிப்படையாக வைத்து இந்த நாவல் எழுதப்பட்டுள்ளது.

‘குழந்தை இறந்துவிட்டது' என்ற திகிலோடு ஆரம்பிக்கும் இந்தப் புத்தகம் பிரான்சில் ஏற்கனவே அதிகம் விற்பனையாகும் புத்தகங்களில் ஒன்றாக இடம்பிடித்துள்ளது. **‘உங்களுக்காக உங்கள் பிள்ளைகள் மீது அன்பு செலுத்துமாறு கூறி இன்னொருவருக்குப் பணம் செலுத்தும் யோசனை’** தன் கவனத்தை ஈர்த்ததாக நாவலாசி ரியர் Slimani குறிப்பிடுகின்றார். ‘இது ஒரு இனம்புரியாத உறவுக்கு வழிவகுக்கின்றது. எங்கள் குழந்தைகளின் மனங்களில் எங்களுக்கான இடங்களை இவர்கள் பிடித்துவிடுவார்களோ என்ற பயம் எங்களுக்கு எப்போதும் இருக்கும்' எனவும் மேலும் குறிப்பிடுகின்றார்.

1903ஆம் ஆண்டிலிருந்து Goncourt அக்கடமியால் இந்த விருது வழங்கப்பட்டுவருகின்றது. முன்னாள் ஊடகவியலாளரான Slimani, 112 வருட வரலாற்றில் Goncourt விருது பெறும் 7வது பெண் நாவலாசிரியர் என்பதும் இது இவருடைய முதல் நாவல் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. தனது விருதைத் தன் பெற்றோர்களுக்கு முக்கியமாக 10 வருடங்களுக்கு முன்னர் இறந்த தனது தந்தைக்கு அர்ப்பணித்துள்ளார். பரி சுத் தொகையாக 10 யூரோக்கள் மட்டுமே Slimaniக்கு வழங்கப்பட்டாலும் 450,000 பிரதிகள் விற்பனை செய்யப்படுவதற்கு Goncourt உத்தரவாதமளித்துள்ளது. ●

## அடையாளஅட்டை மற்றும் பாஸ்போர்ட் புகைப்படங்களில்

# புன்னகை சிந்தலாமா?

**அரச** உயர் அதிகாரி ஒருவர் தனது கடவுச்சீட்டு புதுப்பித்தலுக்காகச் சென்றபோது புன்னகையில்லாத தனது புகைப்படம் கொடூரமாக உள்ளதாக முறையிட்டு தான் புன்னகைக்கும் புகைப்படத்தை மாற்ற கோரிக்கை விடுத்துள்ளார். அலுவலக அதிகாரிகள் தமக்கு 2009ல் கிடைக்கப்பெற்ற சுற்றறிக்கையை ஆதாரம் காட்டி முறையீட்டாளரின் கோரிக்கையை மறுத்துள்ளனர். கொதித்துப்போன உயர் அதிகாரி தனது கோரிக்கையை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றுள்ளார். சட்டரீதியாக புகைப்படங்களில் புன்னகைக்கக்கூடாது என்று எந்தவொரு தடைகளும் இல்லை. உதடுகள் மூடியிருக்க புன்னகைக்க முடியும். ஆனால் எந்தவொரு வெளிப்பாடுகளும் இல்லாத நடுநிலையான புன்னகையாக இருக்க வேண்டும். உதாரணமாக டார்வின்சியின் மொனலீசா ஓவியம் போல் எனக் குறிப்பிட்டுள்ள முறையீட்டாளரின் வழக்கறிஞர், வெறும் ஒரு அதிகாரபூர்வமற்ற சுற்றறிக்கையைக் காரணங்காட்டி புகைப்படங்களில் புன்னகைகள் கூடாது என்பது எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும் எனக் கேள்வியை எழுப்பியுள்ளார். மிகவும் ஒரு இறுக்கமான காலகட்டத்தில் வாழும் பிரான்ஸ் மக்கள் இத்தகைய ஆவணப் புகைப்படங்களில் புன்னகைப்பதன் மூலம் வெவ்வேறான இறுக்கமான ஆவணப்பரிசோதனை நிமிடங்களில் இறுக்கங்களைக் குறைக்க முடியும். வழக்கு நீதிமன்றத்துக்கு சென்றதன் பின்னர் பல பிரான்ஸ் மக்கள் தமது ஆதரவை தெரிவித்துவருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

வழக்கைத் தீர ஆராய்ந்த நீதிமன்றம் புன்னகைக்கக்கூடாது எனத்தீர்ப்பு வழங்கி வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது. உதடுகள் மூடி எந்தவித வெளிப்பாடுகளும் அற்ற நடுநிலையான (Expression neutre) முகபாவனை என்றால் புன்னகையும் அற்ற தோற்றம் தான் என நீதிமன்றம் கோடிட்டுக் காட்டியுள்ளது.




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# Burger பிரியர்களாக பிரான்ஸ் நாட்டவர்கள்



உணவுப் பாரம்பரியத்திற்குப் பேர் போன பிரான்ஸ் நாட்டவர்கள் தற்போது Burger பிரியர்களாக மாறி வருகின்றனர். இத்தகவலை பிரான்ஸ் மக்களின் உணவுத் தெரிவுகள் தொடர்பான ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஐரோப்பாவைப் பொறுத்தவரை அதிக Burgerகள் விற்பனையாகும் நாடுகளின் பட்டியலில் பிரான்சிற்கு இரண்டாவது இடமும், இங்கிலாந்திற்கு முதலாவது இடமுமாகும். 2015ம் ஆண்டில் மட்டும் 1,19 மில்லியாட் Burger கள் பிரான்சில் விற்பனையாகியுள்ளன.

இன்று பிரான்சில் துரித உணவகங்கள் என்று இல்லாமல் சகலவிதமான உணவகங்களின் விலைப்பட்டியல் அட்டைகளிலும் Burgerகளுக்கு நிச்சயமாக இடமுண்டு. பிரான்சிலுள்ள 145000 உணவகங்களில் 75 சதவீதமான உணவகங்களில் Burger சாப்பிடமுடியும், உணவகங்களில் 80 சதவீதமான மக்கள் விரும்பிக் கேட்பது Blanquette de veau, Boeuf Bourguinon அல்ல Burgerகளைத்தான்.

ஜேர்மனியில் தோற்றம் பெற்ற Hamburgerகள் இன்று அமெரிக்கர்களின் முக்கிய உணவாக மாறிவிட்டது. இன்று பிரான்ஸ் மக்களும் அதற்கு அடிமையாகிவிட்டார்கள். McDonald's, Burger King போன்ற துரித உணவகங்களைத் தொடர்ந்து அமெரிக்கப் பிரபலமான Five Guys, Burger உணவகமும் பிரான்சில் கால்பதித்துவிட்டது.

Burgerகளின் ஆதிக்கத்தால் பாதிப்படைவது என்னவோ பிரான்சின் வரலாற்றுப் புகழ்மிக்க சான்ட்விச்களும், பாரம்பரிய உணவு வகைகளும் தான் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று பிரான்சில் ஒரு Burgerன் சராசரி விலை 11,58 யூரோக்களாகும். பாரிஸ் நகரில் 13,06 யூரோக்களாகும். ஒரு நட்சத்திர உணவகத்தில் 30 யூரோக்களாகவும் விற்பனையாகின்றது.

## பாரிசில் நடிகை மல்லிகா செரவத் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டார்



இந்தியாவின் பிரபல நடிகையும் பெண் உரிமைச் செயற்பாட்டாளருமான மல்லிகா செரவத் பாரிசில் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டுள்ளார். ரீமா லம்பா எனும் இயற்பெயரைக் கொண்ட மொடல் அழகியும் நடிகையுமான இவர் இரவு 9.30 மணியளவில் பாரிசின் 16ம் வட்டாரத்திலுள்ள rue de la Faisanderie இல் அமைந்துள்ள அவரது வீட்டிற்கு முன்வைத்துத் தாக்கப்பட்டுள்ளார்.

துணியால் முகங்கள் மறைக்கப் பட்டிருந்த மூன்று பேர் இவரைச் சுற்றி வளைத்ததாகவும் முகத்தை நோக்கி கண்ணீர்ப் புகை அடித்த பின் முகத்தில் குத்திவிட்டு ஓடிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனது கைப்பையைத் திருட அவர்கள் முயற்சித்ததாக மல்லிகா செரவத் பொலீசாரிடம் குறிப்பிட்டுள்ளார். பெண்கள் அடக்கப்படுவதாகவும், பிற்போக்குத் தனமான கொள்கைகள் பெண்கள் மீது திணிக்கப்படுவதாகவும் இவர் இந்தியாவை கடுமையாக விமர்சித்திருந்ததும் குறிப்பிடத் தக்கது.

அமெரிக்காவின் பிரபல தொலைக் காட்சி நட்சத்திரம் கிம் கார்டாசியன் பிரான்சில் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்று ஒரு சில வாரங்களே ஆகியுள்ள நிலையில் இந்த சம்பவமும் பாரிசில் இடம்பெற்றிருக்கின்றது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




## அமெரிக்கப் பாடகர்

# Bob Dylan

**நோபல் பரிசு** தேர்வுக்குழுவினர் மீண்டுமொரு முறை தமது தனித்துவத்தைப் பதிவு செய்துள்ளனர். 2016ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல்பரிசு தெரிவுப் பட்டியலில் இலக்கிய ஆர்வலர்கள் கொண்டாடும் ஜப்பான் எழுத்தாளர் முரகாமி (Haruki Murakami), சிரியா கவிஞர் Adonis, இன்னும் கென்யா எழுத்தாளர் Ngugi wa Thiongo என எதிர்பார்க்கப்பட்டனர். இருப்பினும் அக்கடமியின் 17 பேர் கொண்ட தெரிவுக்குழுவினரின் விருப்பு வேறு விதமாக பலரையும் ஆச்சரியப்படுத்தும் விதமாக அமைந்தது.

இந்த வருடம் பரிசு பெற்றுள்ளவர் பிரபல அமெரிக்கப்பாடகரும், பாடலாசிரியருமான Bob Dylan ஆவார். ஒரு இசைத்துறை சார்ந்தவருக்கு இவ்விருது கிடைப்பது இதுவே முதல் தடவையாகும். இன்று 75 வயதாகும் Bob Dylan இசைத்துறையில் மிகவும் பிரபலமானவர். குறிப்பாக இவரின் பாடல்வரிகளின் கவித்துவம் தொடர்ந்து கவனம் பெற்று வருகின்றது. 2016ம் ஆண்டு தனது 37வது இசைத்தட்டான Fallen Angels வெளியிட்டிருந்தார். நோபல் பரிசுளின் தோற்றுவிப்பாளரான சுவீடனைச் சேர்ந்த Alfred Nobel ஒரு கவிதைப் பிரியர். இக்காரணத்தாலேயே இலக்கியத்திற்கான முதலாவது விருது 1901ம் ஆண்டும் பிரான்ஸ் கவிஞர் Sully prudhomme க்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. பின்னர் தொடர்ந்து பல கவிஞர்களுக்கு இக்கௌரவம் கிடைத்துள்ளது. Bob Dylan கவிஞர் அல்ல பாடலாசிரியர் மட்டுமே! அவருக்கு எவ்வாறு இலக்கியத்திற்கான இவ் உயர் விருது வழங்க முடியும் என விமர்சனங்களும் எழாமலில்லை.

இருப்பினும் நோபல் தெரிவுக்குழுவினர் வருடா வருடம் எதிர்பார்ப்புகளைத் தகர்த்து புதுமைகளை புகுத்திவருகின்றனர். 2013ம் ஆண்டில் புனைவு எழுத்தாளரான Alice Munro வுக்கு விருதை வழங்கிக் கௌரவித்தனர். இவரே முதலாவது விருது பெற்ற ஒரு நாவலாசிரியராவார். அரசியலிலிருந்து Sir Winston Churchillக்கு அவரின் மேடை உரைகளின் செழுமைக்காக வழங்கப்பட்டது. தத்துவ ஆசிரியர்கள் மூவர், வரலாற்று ஆசிரியர் எனத் தொடரும் பட்டியலில் ஒரு இசைக்கலைஞனின் பெயர்தான் இடம்பிடிக்கவில்லை. இம்முறை அதுவும் செவ்வனே நிறைவேறியுள்ளது.



# பிரான்ஸ் அதிபர் தேர்தலில் மிக இளவயது வேட்பாளர்

**நடைபெறவிருக்கும்** 2017 பிரான்ஸ் அதிபர் தேர்தலில் மிக இளவயது வேட்பாளராக 21 வயதேயாகும் Ismaël Boudjekada களமிறங்கியுள்ளார். பொதுப்பரப்பில் பெயர் புதிதாக இருந்தாலும், அரசியல் பரப்பில் சிறிதேனும் தெரிந்த முகம்தான். பிரான்ஸ் அரசியல் மீது கொண்ட தீராத ஆர்வத்தால் தனது 16வது வயதினிலேயே தனக்கான அரசியற் கட்சியை ஆரம்பித்தார். கட்சியை ஆரம்பித்ததோடு நின்றுவிடாமல் பலவகையான தேர்தல்களிலும் போட்டியிட்டவர். 2014ல் Besançon மாநகர சபைத்தேர்தலில் 0,73 சதவீத (264) வாக்குகளும், ஐரோப்பியப் பாராளுமன்றத்தேர்தலில் 0,02 வீத (382) வாக்குகளும் பெற்றார். 2015 சட்டமன்றத் தேர்தலிலும் பங்குபற்றியுள்ளார்.

சமூக வலைத்தளங்களில் எழுதிவரும் அரசியல் கருத்துக்களாலும் பலரது கவனத்தையும் ஈர்த்து வருகிறார். தனது தேர்தல் வாக்குறுதிகளில் பிரான்சில் ஏற்படவேண்டிய மூன்று மாற்றங்களை முன்வைத்து அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளார்.

1. அனைவருக்கும் ஒரே வருமானம். இது பிரான்சின் பிராந்தியங்களை பொறுத்து கூடிக்குறையும். முக்கியமாக வேலை செய்தாலோ, இல்லையோ அனைவருக்கும் ஒரே வருமானம்.

2. கடன்சுமைகள் சீரமைப்பு, வட்டிகளை நிறுத்தி முதல் மட்டும் திருப்பும் வண்ணம் மறுசீரமைப்பு.

3. பிரான்சின் அனைத்து இனமக்களும் ஒன்றாக சேர்ந்து வாழும் வழிமுறைகளை முன்னெடுத்தல். குறிப்பாக மதச்சார்பின்மை என்றால் என்ன என்பதை மீண்டும் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக இன்னும் பல வாக்குறுதிகளுடன் பிரான்சை மாற்றி அமைத்துக் காட்டுவேன் என்கிறார். அதிகாரபூர்வமாகத் தன்னை தேர்தல் வேட்பாளராக அறிவித்துவிட்டாலும் முதல் சுற்றில் போட்டியிடுவதற்கு குறைந்தது 500 பேரின் ஆதரவுக் கையொப்பமாவது பெற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் 200 கையெழுத்துக்களுடன் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றார்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# புதிய பொலிவுடன் மிளிரப்போகும் Gare du Nord புகையிரத நிலையம்!

போக்குவரத்துச் சேவையில் ஐரோப்பாவின் முதலாவது புகையிரத நிலையம் என்றால் அது Gare du Nord நிலையம் தான். ஒரு நாளுக்கு 7 இலட்சம் பயணிகள் சங்கமிக்கும் இப்புகையிரத நிலையத்தில் நாளுக்கு 2100 புகையிரதங்கள் பயணிக்கின்றன. சேவைத் திறனில் சிறப்பான இப்புகையிரத நிலையம் மற்றைய ஐரோப்பிய நாட்டு புகையிரத நிலையங்களைவிட அனைத்து வகையிலும் தன்னை தனித்து நிலைநிறுத்த வேண்டியது கட்டாயமாகின்றது. கட்டட ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் தன்னை நவீனமயமாக்கி ஒரு பாரிய உருமாற்றத்தைப் பெறவுள்ளது.


வருகை மற்றும் புறப்பாடு எனத் தனித்தனிப் பிரிவுகள், புறநகர் புகையிரதங்கள் Eurostar, Thalys எனத் தனித்தனிக் கட்டடங்கள், பயணிகள் உள்நுழைவதற்கான புதிய வாசல், (இது rue de Maubeuge லிருந்து புதிதாக பாலமாக நிர்மாணிக்கப்படவுள்ளது) புகையிரத நிலையத்தின் முன்பக்கமாக வெளியேறும் வாசல் போன்றவையும் அமையவுள்ளன. ஒன்றிணைக்கப்பட்ட அனைத்து கட்டிடங்களின் மேற்கூரையிலும் (20000m²)தாவரங்கள் வளர்க்கப்படவுள்ளன. இம்மாபெரும் கட்டுமானப்பணிகள் பல பிரிவுகளாக நடைபெறவுள்ளன. உட்புற நிர்மாணப் பணிகள் தற்போதே நடந்துவரும் பட்சத்தில் வெளிப்புற கட்டுமானங்கள் 2018ல் ஆரம்பமாகி 2024ம் ஆண்டு முடிவடையும். 19ம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற இப்புகையிரத நிலையத்தின் நவீனமயமாக்குதலுக்கான செலவீனங்களாக 600 மில்லியன் யூரோக்கள் கணக்கிடப்பட்டுள்ளது.



# வேண்டாம் Trumps!

அமெரிக்க அதிபர் தேர்தல் உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் பிரான்சின் பிரபல இசைக்குழுவொன்று தங்கள் பெயரை மாற்றத் தீர்மானித்துள்ளது. Electro Rock இசைக்குழுவினரான Trumps இசைக்குழுவே இந்த முடிவை எடுத்துள்ளது. தாங்கள் சர்ச்சைகள், முரண்பாடுகளைத் தவிர்க்க விரும்புவதாக குறிப்பிடும் அவர்கள் முகப் புத்தகம் ஊடாகத் தங்கள் ரசிகர்களிடம் புதிய பெயருக்கான ஆலோசனைகளைக் கோரியுள்ளனர். அமெரிக்க தேர்தல் பிரச்சாரங்கள் சூடுபிடித்ததிலிருந்து தங்கள் இசைக்குழுவின் பெயர் அடிபட்டுவிட்டதாகவும், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்போடு தங்கள் பெயர் தொடர்புபடுவதைத் தாங்கள் விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். அரசியல் பின்னணிகளோ தொடர்புகளோ இருப்பதை விரும்பாத காரணத்தினாலே பெயரை மாற்றத் தீர்மானித்துள்ளனர்.


**தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின்**
**சுனாமி வணக்க நிகழ்வு**
**26.12.2016**
**திங்கட்கிழமை**




**கலாலய மாணவிகளின் அரங்கேற்றம்**

கலாலயம் கலைக்கல்லூரி அதிபர்
'பரதசூடாமணி' கௌசலா ஆனந்தராஜா
அவர்களின் மாணவிகள்
செல்வி. நில்ஷா சிவகுமார்
செல்வி. ஷர்மினி சிவராசா ஆகியோரின்
பரதநாட்டிய அரங்கேற்றங்கள்
கடந்த ஒக்ரோபர் மாதம் 16ம் மற்றும்
30ம் திகதிகளில் பிரான்சில் நடைபெற்றன.


**எல்லோருக்கும் நல்லவராக இருக்க முயற்சிக்கும் போது தான் கெட்டவர் என்ற பெயரை சம்பாதிக்கிறோம்...!**



# "தூங்கும் அழகி"க்கு முதலிடம்!

2017ல் விடுமுறையைக் கழிக்க உலகில் மிகச் சிறந்த நகரமாக போர்தோ தெரிவுசெய்யப்பட்டுள்ளது. "தூங்கும் அழகி" என அழைக்கப்படும் நகரம் தற்பொழுது விழிப்படைந்துவிட்டதாக உலகின் மிகப் பெரிய பயண வழிகாட்டிப் புத்தகமான Lonely Planetஇல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகின் மிகச்சிறந்த 10 நகரங்களை அவர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

போர்தோவைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவின் **Cape Town** இரண்டாம் இடத்தையும், அமெரிக்காவின் Los Angeles மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன. புதிய TGV தொடரி மூலம் அடுத்த வருடத்திலிருந்து பாரிசும் போர்தோவும் மிகவும் நெருங்கிவிடும். அதைவிட புதிதாக திறந்திருக்கும் Cité du Vin (வைன் அருங்காட்சியகம்), Garonne நதியோரமான நடைபயணமும் அதையொட்டியிருக்கும் அழகிய கட்டடக்கலைகள், இயற்கைச் செழிப்பு போன்ற பல காரணிகள் போர்தோவிற்கு வலுச்சேர்த்துள்ளன.















## 'Brexit'

2016ம் ஆண்டில் அதிகம் உச்சரிக்கப்பட்ட சொல் என்ற பெருமையை 'Brexit' சொல் பெற்றுள்ளது. British Exit என்பதன் சுருக்கமே Brexit ஆகும். முதன்முறையாக 2013ம் ஆண்டில் டேவிட் கமரூனால் உச்சரிக்கப்பட்ட இச் சொல்லின் பயன்பாடு அதன் பின்னரான காலப் பகுதியில் 3400 சதவீத உயர்வைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. "இந்த வருடத்திற்கான சொல்" என்ற தகைமையை Brexitக்கு வழங்கி Collins அகராதி கௌரவித்துள்ளது.



## 'கபடமில்லாதவன் பாக்கியசாலி'

பாரிஸ்
லாச்சப்பலில்

# சங்கீதா அச்சகம்

நிலா
www.nilafrance.fr

# 2017
# கலண்டர்கள்!!



வாக்கிய பஞ்சாங்கப்படி
இலங்கைநேரத்திற்கு கணிக்கப்பெற்ற
**நாட்காட்டி**
ஒடருக்குப்
பெற்றுக் கொள்ளலாம்



## 2017 உங்கள் கைகளில்

நிலா
திருக்குறள்
வாரக்கலண்டர்

**39, Bd de la Chapelle - 75010 Paris**
M° : La Chapelle
**Tél. : 01 44 72 08 94**
e-mail: sangeethafrance@gmail.com



பாரிஸ் லாச்சப்பலில்
கோபால் அன் கோ
GOPAL & CO
2017
புதுப்பொலிவுபெற
வாழ்த்துகிறோம்
இலங்கை இந்தியாவிற்கு
மிகக் குறைந்த விலையில்
கதைப்பதற்கு Kish Mobile!
KISH MOBILE
VOTRE CARTE SIM PRÉPAYÉE
9,90€
7,50€ de crédit inclus
LE BON PLAN AU MEILLEUR PRIX
www.kishmobile.fr
micro standard
72, Rue Louis Blanc - 75010 PARIS M°: La Chapelle
Tél : 09 51 56 76 52 Fax : 01 46 07 13 03

# Sakharov

## விருது பெறும் Yazidies இனக்குழுப் பெண்கள்



"இன அழிப்பிலிருந்து சர்வதேசம் எம்மைக் காப்பாற்றத் தவறிவிட்டது"

- Nadia Murad



மனித உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கான Sakharov விருது 1988ம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றது. 1988ம் ஆண்டு நெல்சன் மண்டேலாவில் ஆரம்பித்து தொடர்ந்து வருகின்றது.

இவ்விருதின் பெயர் கொண்ட Sakharov (Andrei Dmitrievich Sakharov) சோவியத் யூனியனைச் சேர்ந்த அணுக்கரு இயற்பியல் விஞ்ஞானியாவார். மனித உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடியவர். 1975ம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


**மனித உரிமைகளுக்காகப்** போராடும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு வருடாவருடம் ஐரோப்பிய பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் Sakharov விருது அறிவிக்கப்பட்டுள்ளது. 2016ம் ஆண்டுக்கான விருது Yazidies இனக்குழுப் பெண்களான Nadia Murad மற்றும் Lamia Haji Bachar ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு பெண்களும் Daesh குழுக்களினால் பலமாதங்கள் பாலியல் அடிமைகளாக அடிமைப்படுத்தப்பட்டு பின்னர் தப்பி ஓடி இன்று ஜேர்மனியில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்விரு பெண்களுக்கும் தலா 50000 யூரோக்களும், விருதும் வழங்கி ஐரோப்பியப் பாராளுமன்றம் கௌரவிக்கவுள்ளது.

Daesh அமைப்பினால் ஒரு இன அழிப்பே நடைபெற்றுவருகிறது. ஈராக்கின் வட எல்லையில் வாழும் Yazidies மதத்துப் பெண்கள் பாலியல் அடிமைகளாகவும், ஆண்கள் சிரியாப் போர் முனைகளில் முன்வரிசையாளர்களாகவும் Daesh அமைப்பினால் அழிக்கப்பட்டு வருகின்றனர்.

தமது மக்களின் இன விடுதலைக்காகவும், தம்மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்பை சர்வதேசம் கண்டுகொள்ள வேண்டும் எனவும் பாலியல் அடிமைகளாகச் சிரியப் போர்க்களங்களில் அடிமைப் படுத்தப்பட்டுள்ள பெண்களை விடுவிக்க வேண்டும் எனவும் இவர்கள் அரசுசார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து போராடி வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபைத் தகவலின் அடிப்படையில் இன்றைய திகதிக்கு பெண்களும் ஆண்களுமாக 3200 Yezidies இனத்தவர்கள் Daesh அமைப்பால் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

Nadia Murad கடந்த டிசம்பர் மாதம் ஐ.நா சபையில் ஆற்றிய உரையான "இன அழிப்பிலிருந்து சர்வதேசம் எம்மைக் காப்பாற்றத் தவறிவிட்டது" என்ற உரை அவரை உலகறியச் செய்தது. இன்று ஐ.நா வின் நல்லெண்ணத் தூதுவராக தமது மக்களுக்காகச் செயற்பட்டு வருகின்றார்.

# பிரான்சிற்கு அன்பளிப்புச் செய்யும் அமெரிக்கர்கள்



உலகப் பிரசித்திபெற்ற அருங்காட்சியகங்களில் ஒன்றான பிரான்சின் Orsay அருங்காட்சியகத்திற்கு அபூர்வமான நன்கொடை கிடைக்கவுள்ளது.

அமெரிக்கச் செல்வந்தர்களான Spencer, Marlene Hays தமது வாழ்நாள் கலைச்சேகரிப்புகளை பிரான்சின் Musée d'Orsay அருங்காட்சியகத்திற்கு நன் கொடையாக வழங்கவுள்ளனர் முதுமை யடைந்து விட்ட இருவரும், தமது சேகரிப்பிலுள்ள 600 கலைப்படைப்புகளில் 360 படைப்புகளை Musée d'Orsay இற்கு வழங்குகின்றனர். அவர்கள் நன்கொடையாக வழங்கவிருக்கும் படைப்புகளின் பெறுமதி 350 மில்லியன் யூரோக்களாகும். படைப்புகளின் வயது கூடக்கூட பெறுமதியும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

1945ம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு வெளிநாட்டவரால் இத்தகைய பாரிய நன்கொடை பிரான்ஸ் அருங்காட்சியகம் ஒன்றிற்கு வழங்கப்படுகின்றது எனக் குறிப்பிட்ட Musée d'Orsay நிர்வாகத் தலைவர் 19ம் நூற்றாண்டு இறுதி மற்றும் 20ம் நூற்றாண்டு ஆரம்பகாலப் படைப்புகள், குறிப்பாக பிரபல "நபி" ஓவியப்பாணி ஓவியர்களான Bonnard, Vuillard, Odilon Redon, Maurice Denis ஆகியோரின் பல அபூர்வமான படைப்புகள் பிரான்சிற்கு கிடைக்கவுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

அதிகாரபூர்வமான அறிவிப்பு பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் முன்னிலையில் Hays குடும்பத்தினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ் வைபவத்தில் Spencer மற்றும் Marlene Hays ஆற்றிய கலைச் சேவையைக் கருத்திற்கொண்டு, பிரான்சின் அதியுயர் விருதான Commandeur de la Légion d'honneur விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இன்று 80 வயதாகும் செல்வந்தர்களின் மரணத்தின் பின்னரே இக்கலைப்படைப்புகள் அருங்காட்சியகத்தை வந்தடையும்.





இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




# ஏன் இந்தப் பாரபட்சம்?

ஒரே பணியிலுள்ள பெண்கள் ஆண்களை விட சராசரியாக 15 சதவீதம் குறைவான மாத வருமானத்தை பெறுகின்றனர். இது நீண்டகாலமாக தொடர்ந்து வரும் பெண்கள் மீதான பாரபட்சமாகும். பிரான்ஸ் உட்பட உலகமெங்கும் பல நாடுகளில் இந்நிலை தொடர்ந்து வருகின்றது.

இந்நிலையை எதிர்த்து பல நாடுகளில் பெண்கள் சார் அமைப்புகள் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். குறிப்பாக பிரான்சில் Les Glorieuses பெண்கள் அமைப்பினரால் 7ம் திகதி நவம்பர் மாதம் நடாத்தப்பட்ட போராட்டம் பலரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. பிரான்சில் பெண்களை நவம்பர் 7ஆம் திகதியன்று 16.34 மணிக்கு வேலையை முடித்து தமது எதிர்ப்பைப் பதிவு செய்யக் கோரியிருந்தனர்.

பெண்களுக்கு கிடைக்கப்பெறும் வருட வருமானத்தை ஆண்கள் பெறும் வருட வருமானத்தோடு கணக்கிட்டால், 7ம் திகதி நவம்பர் 16.34 மணி மட்டும் வேலை செய்தால் போதுமானதாகும். 7 நவம்பர் முதல் 31 டிசம்பர் வரை வேலை செய்தால் ஆண்களுக்குக் கொடுப்பதைப் போன்ற சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

ஐஸ்லாந்தில் பெண்கள் அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்ட வடிவம் இப்பொழுது பல நாடுகளையும் தொட்டு வருகின்றது. ஆண், பெண் சமத்துவம் பேசும் எமது சமூகத்தில் எமது அனைத்து உரிமைகளையும் சரிவரப்பெற தொடர்ந்து போராடுவது எமது கடமை என Les Glorieuses அமைப்பு தெரிவித்துள்ளது.

## பூமிப்பந்தில் 92% மக்கள் அதீத மாசுபட்ட காற்றையே சுவாசிக்கின்றனர்

உலக சுகாதாரமையம் உலகில் வளிமண்டலம் அதிகம் மாசடைந்துள்ள 500 நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. நைஜீரியாவில் உள்ள Onitsha நகரே உலகிலேயே அதிக மாசடைந்த நகரமாகும். இங்கு வளிமண்டலத்தில் கலந்திருக்கும் நச்சுத் துகள்களின் அளவு உலகச்சுகாதார மையத்தினால் அனுமதிக் கப்பட்டுள்ள அளவிலிருந்து 29 மடங்கு அதிகமானதாகும்.



இரண்டாவது இடத்தில் பாகிஸ்தானில் உள்ள Peshawar நகரும், மூன்றாவது இடத்தில் ஈரானின் Zabol நகரும் உள்ளன. இம்முதல் 3 நகர்களைத் தொடர்ந்து சீனாவின் 117 நகரங்களும், இந்தியாவின் 98 நகரங்களும் 500 இற்குள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஐரோப்பாவைப் பொறுத்தவரை போலந்தில் அமைந்துள்ள Silésie நகர் மட்டும் 500 இற்குள் உள்ளது. வளி மாசடைவு என்பது அதீத தொழிற்சாலை புகை வெளியேற்றங்களாலும், நிலக்கரித் தொழில் துறைகளாலுமே அதிகம் ஏற்படுகின்றது.

## பிரான்சில் மீண்டும் மூடப்படும் MARKS & SPENCER

இங்கிலாந்தின் பிரபல வர்த்தக நிறுவனமான Marks & Spencer மீண்டும் ஒரு முறை குறிப்பிட்ட சில தமது வர்த்தக நிலையங்களை மூடவுள்ளது. குறிப்பாக பிரான்சிலுள்ள 18 வர்த்தக நிலையங்களில் 8 வர்த்தக நிலையங்களை மூடவுள்ளன. பிரான்சில் 2001 வரை பிரபல்யமாக இயங்கிவந்த Marks & Spencer திடீரென போதியளவு இலாபம் இல்லை எனக்காரணம் காட்டி வர்த்தக நிலையங்களை மூடிச் சென்றனர். 2011ம் ஆண்டு மீண்டும் பிரான்சில் தமது கால்களைப் பதித்தனர். Marks & Spencer ன் மீள்வருகை பிரான்ஸ் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது.

1884ம் ஆண்டு இங்கிலாந்தின் Leeds நகரில் உருவகம் பெற்ற Marks & Spencer இன்று இங்கிலாந்தில் ஆடை விற்பனையில் முதலாவது இடத்தில் இருந்து வருகிறது. இங்கிலாந்தில் மட்டும் 700க்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் உள்ளன. பிரான்சில் மக்கள் பெரிதும் விரும்புவது ஆடை–வகைகளை அல்ல Marks & Spencerஇன் உணவுப்பொருட்களையே என்பது குறிப்பிடத்தக்கது. இக்காரணத்தாலேயே பிரான்சில் அவர்களால் போதிய அளவு வருமானம் ஈட்டமுடியாமல் தவித்து வருகின்றனர். 2015 – 2016 காலகட்ட கடனுயர்வாக 26,1 மில்லியன் யூரோக்களை கணக்கு காட்டியுள்ள நிர்வாகத்தினர் நஷ்டத்தில் இயங்கும் வர்த்தக நிலையங்களை 10 நாடுகளில் மூடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இதில் பிரான்சில் இயங்கும் 8 வர்த்தக நிலையங்களும் அடக்கம். பிரான்சின் முதலாவது வர்த்தக நிலையமான Champs-Elysées ல் அமைந்துள்ள Marks & Spencer உட்பட குழுமத்தின் நேரடி நிர்வாகத்தில் இயங்கும் அனைத்து Marks & Spencer களையும் மூடவுள்ளனர். பெயர் உரிம அடிப்படையில் இயங்கும் மற்றைய வர்த்தக நிலையங்கள் குறிப்பாக உணவுப்பொருள் விற்பனை நிலையங்கள் மூடப்படமாட்டாது எனவும் இது போன்று மேலும் பல உணவு பொருள் விற்பனை நிலையங்கள் புகையிரத நிலையங்கள் மற்றும் விமான நிலையங்களில் தொடர்ந்து திறக்கப்படவுள்ளன எனவும் தெரிவித்துள்ளனர். இந்நிலையால் பிரான்சில் மட்டும் 517 பேர் வேலை வாய்ப்பை இழக்கவுள்ளனர்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# பாரிஸ் மகாஜனா கல்வி நிலையம்

## *Mahajana Master Institute- Paris.*

# டிசம்பர் முதல்

# புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்!

## 2007 இலிருந்து இதுகாலவரை.....

ஆங்கில மொழிக் கல்வியில் மிகவும்
பெறுமானமுள்ள வெற்றிகளைப் பெற்ற நாம்
**தற்போது எமது கல்விநிலையத்தை**
**கணிதம் – பிரெஞ்சு – ஆங்கிலம்**
**என விரிவுபடுத்தியுள்ளோம்**

## Time Table for 2016/2017

| PRIMAIRE (TOUT NIVEAU) | COLLEGE (TOUT NIVEAU) | LYCEE (TOUT NIVEAU) |
|---|---|---|

- **COURS D'ANGLAIS** (Mercredis et Samedis)

Programmes de UNIVERSITY OF CAMBRIDGE BRITISH COUNCIL

| | |
|---|---|
| o Starters | 7, 8 ans |
| o Movers | 9, 10, 11 ans |
| o Flyers | 12, 13 ans |
| o KET | 13 ans et plus |
| o PET | |
| o FCE | |

- **SOUTIEN SCOLAIRE** (Mercredis et Samedis)
  (Tout niveau)
  - o Niveau Primaire (CP – CM2)
  - o Niveau Collège ($6^{ème}$ – $3^{ème}$)
  - o Niveau Lycée ($2^{nd}$ – Terminale)
- **COURS DE MATHEMATIQUES** (Samedis et Dimanches)
  - o Niveau Collège ($6^{ème}$ – $3^{ème}$)
  - o Niveau Lycée ($2^{nd}$ – Terminale)
- **COURS DE FRANÇAIS** (Tous les jours)
  - o Niveau Collège ($6^{ème}$ – $3^{ème}$)
  - o Niveau Lycée ($2^{nd}$ – Terminale)
- **COURS DE FRANÇAIS Pour adultes.** (Tous les jours)


**Renseignements et Inscriptions au**
**06 11 68 82 50**
**06 28 61 28 63.**

7, Rue Emile Zola,93120 La Courneuve.
RER B : (La Courneuve Aubervilliers) ல் இருந்து 5 நிமிட நடைதூரம்
Métro : (La Courneuve) ல் இருந்து பஸ் இலக்கம் 173 ஊடாக வந்து Hemet தரிப்பிடத்தில் இறங்கவும்

# துயர் பகிர்வு

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்
**சிவலிங்கம் இராதாகிருஸ்ணன்**
(யாழ். மானிப்பாய், பிரான்ஸ்)
தோற்றம் : 25. 04. 1957
மறைவு : 06 . 09. 2016



அமரர்
**ராசகுமார் விகாஷ்**
(வேலணை கிழக்கு, பிரான்ஸ்)
தோற்றம் : 17. 12.2004
மறைவு : 19. 10. 2016



அமரர்
**பவளராஜா விஜித்தா**
(யாழ். நாரந்தனை, பிரான்ஸ்)
தோற்றம் : 23. 08. 1982
மறைவு : 08. 09. 2016



அமரர்
**செல்லத்துரை லிங்ககுரு**
(யாழ். வட்டுக்கோட்டை)
தோற்றம் : 15. 07. 1938
மறைவு : 27. 10. 2016



அமரர்
**ஜெயந்தன் தமிழ்ப்பிரியா**
தோற்றம் : 31. 03. 1978
மறைவு : 22. 09. 2016



அமரர்
**கண்ணப்பு இராசமணி**
(யாழ். அளவெட்டி, நெதர்லாந்து)
தோற்றம் : 01. 07. 1937
மறைவு : 08. 11. 2016



அமரர்
**நடேசன் பாலச்சந்திரன்**
(யாழ். உடுவில், பிரான்ஸ்)
தோற்றம் : 08. 08. 1957
மறைவு : 24. 09. 2016



அமரர்
**விசுவலிங்கம் விஜயலட்சுமி**
(யாழ். ஊர்காவற்றுறை, பிரான்ஸ்)
தோற்றம் : 06. 04. 1963
மறைவு : 23. 09. 2016



அமரர்
**திருஞானம் ரவிராஜா**
(புங்குடுதீவு, ஜேர்மனி)
தோற்றம் : 14. 12. 1968
மறைவு : 25. 09. 2016



அமரர்
**நல்லையா இராசாத்தியம்மா**
(கிளி. ஆனையிறவு, விசுவமடு)
தோற்றம் : 06. 04. 1937
மறைவு : 16. 11. 2016



அமரர்
**நடராஜா அல்லிக்கொடி**
(யாழ். அராலி)
தோற்றம் : 04. 10. 1934
மறைவு : 26. 09. 2016



அமரர்
**பொன்னம்பலம் மகாலட்சுமி**
(யாழ்.. கோண்டாவில் வடக்கு)
தோற்றம் : 18. 01. 1937
மறைவு : 20. 10. 2016



அமரர்
**கணபதிப்பிள்ளை செல்வரட்ணம்**
தோற்றம் : 04. 03.1965
மறைவு : 01. 10. 2016



அமரர்
**சிவசிதம்பரம் சந்தியேந்திரா**
(இங்கிலாந்து)
தோற்றம் : 14. 05. 1951
மறைவு : 29. 10. 2016



அமரர்
**சபாரட்ணம் சுந்தரலிங்கம்**
(யாழ். திருநெல்வேலி, பிரான்ஸ்)
தோற்றம் : 04. 03. 1950
மறைவு : 04. 10. 2016



அமரர்
**திருமதி. பத்தினிப்பிள்ளை (மன்னவன்) கந்தப்பு**
தோற்றம் : 12. 10. 1929
மறைவு : 13. 09. 2016



அமரர்
**ஐயம்பிள்ளை ரவிச்சந்திரன்**
(சுன்னாகம், பிரான்ஸ், லண்டன்)
தோற்றம் : 18. 06. 1964
மறைவு : 14. 10. 2016



அமரர்
**கோகிலாம்பாள் கிருஷ்ணமூர்த்தி**
(கருகம்பனை, /அவுஸ்திரேலியா)
மறைவு : 17. 11. 2016

# அகதிகளுக்கு மனிதாபிமானத் தங்குமிடம்!

Calais முகாம்களிலிருந்து சட்ட விரோத குடியேற்றவாசிகள் அகற்றப்பட்டதன் பின்னர் முதன் முதலாக அகதிகள் மற்றும் குடியேற்றவாசிகளுக்கான தங்குமிடம் திறந்து வைக்கப் பட்டுள்ளது. பாரிசின் வடக்குப் பகுதியில் ஆண்களுக்கான 400 தங்குமிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. வட கிழக்குப் பாரிசிலிருந்து 3800 பேர் பொலீசாரால் அகற்றப் பட்டதைத் தொடர்ந்து இந்த திட்டங்கள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

புதிதாக பிரான்சுக்குள் நுழையும் குடியேற்றவாசிகள் மனிதாபி மான ரீதியில் வரவேற்கப்பட்டு அவர்கள் தங்குவதற்கான அடிப் படை வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்த புதிய முகாம்களின் நோக்கம். இந்த முகாம்களை Solidarité charity எனும் தொண்டு நிறுவனம் அமைத்துக்கொடுத்துள்ளது.



குடும்பத்தவர்கள் மற்றும் பெண்களுக்கான இருப்பிடங்கள் 2017இன் ஆரம்பப் பகுதியில் Ivry-sur-Seineஇல் திறக்கப்பட வுள்ளன. அடுத்த ஆண்டில் பிரான்சின் அதிபர் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதிகரித்துவரும் சட்டவிரோத குடியேற்றவாசிகள் பிரச் சனையை கையாளுவதற்கான திட்டங்கள் தம்மிடம் இருப்பதை காண்பிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கத்திற்கு இருப்ப தாக ஆய்வாளர்கள் கருதுகின் றனர்.


**சைவ சமய வகுப்புக்கள்**
லாச்சப்பல்
**அம்மன் கோயிலில்**
இலவசமாக நடாத்தப்படுகின்றன.



# சீனாவிடம் கைமாறும் பிரான்சின் இனிப்பு

பிரான்சின் மிகவும் பிரபலமான இனிப்பு வகை தற்போது சீனாவிடம் கைமாறியுள்ளது. Calissons d'Aix எனப்படும் பழத்திலிருந்து செய்யப்படும் இனிப்பு வகையின் முழு உரிமத்தையும் பிரான்சிடமிருந்து சீனா வாங்கியுள்ளது. 14 வருடங்களாக இந்த உரிமத்தைத் தக்கவைக்க பிரான்ஸ் நிறுவனங்கள் போராடியிருந்தாலும் Ye Chun-lin எனும் சீன நிறுவனம் மிக இலகுவாக சர்வதேச வர்த்தகக்குறி உரிமத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. பிரான்ஸ் நாட்டவர்கள் இந்த இனிப்பு வகையை இலகுவாக செய்து விற்பனை செய்ய முடிந்ததில்லை. காரணம் இந்த இனிப்பு வகையைச் செய்வதெற்கென கட்டுப்பாடான செய்முறை இருந்துவந்தது. இதன் செய்முறையை வரையறுத்து சர்வதேச ரீதியல் இந்த இனிப்பிற்கான trademark ஐ பெற்றுக்கொள்ள பிரான்ஸ் உற்பத்தியாளர்கள் 14 வருடங்களாக இழுபறிப்பட்டிருந்த நேரத்தில் சீன நிறுவனம் முந்திவிட்டது. பிரான்சின் தெற்குப் பகுதியில் மிகப் பிரபலம் வாய்ந்த இனிப்பு வகைகளில் ஒன்றாக இது இருந்தாலும் இதன் பூர்வீகம் இத்தாலி எனக் கூறப்படுகின்றது.

**'என்ன சொல்லுகிறீர்கள் என்பதைவிட எப்படிச் சொல்லுகிறீர்கள் என்பதில்தான் உங்கள் ஆற்றல் அடங்கியிருக்கிறது'**


PARADISE Travels

வாடிக்கையாளர்களுக்கு
இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்



சென்னை - 425€
கொழும்பு - 440€
றொரன்ரோ - 540€
மொன்றியல் - 580€
மலேசியா - 510€
சிங்கப்பூர் - 600€
ஒஸ்லோ - 180€
டென்மார்க் - 240€
கத்தானியா - 190€

ஆண்டு முழுவதும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த கட்டணத்தில் விமான ரிக்கற்றுகளை பெற்றுக் கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
வீசா ஒழுங்குகள் செய்து தரப்படும்
இந்திய வீசா 80 யூரோ மட்டுமே

48, Rue Louis Blanc - 75010 Paris
Tél : 09 83 34 08 80 / 09 83 34 65 95
email: paradisetravel10@yahoo.fr
M°: La Chapelle, Gare du Nord, Louis Blanc ou Stalingrad




# உடற் கட்டமைப்பை இழக்கும் பிரான்ஸ் நாட்டவர்

**பிரான்ஸ்** நாட்டவர்களே மெல்லிடையுடன் அழகிய உடல்வாகு கொண்டவர்கள் என்ற நீண்டகால வர்ணிப்பு இப்போது ஆட்டம் காணத்தொடங்கியுள்ளது. தற்போதைய புதிய ஆய்வின் படி பிரான்சில் அரைவாசிப்பேர் சராசரி எடையை விட அதிக எடை கொண்டவர்களாக உள்ளனர். முக்கியமாக ஆறு பேரில் ஒருவர் அதீத உடற்பருமன் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

உலகிலேயே சிறந்த உணவுப் பழக்கம் கொண்டவர்களாகவும், உலகிலேயே சிறந்த பாடசாலை மதிய போசனம் வழங்கும் நாடு என்ற கணிப்போடு பிரான்ஸ் இருப்பதாலும் இந்த எண்ணம் எல்லோர் மனதிலும் விதைக்கப்பட்டிருந்தது. ஆனால் இது கற்பனை மாத்திரமே எனவும் யதார்த்தத்தில் அவ்வாறு இல்லை என்பதை ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. 30000 பிரான்ஸ் மக்களிடையே மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் 15.8 வீத ஆண்களும் 15.6 வீத பெண்களும் அதிக உடற்பருமன் கொண்டவர்கள் என்ற வகைப்படுத்தலில் உள்ளடங்குகின்றனர்.

பிரான்சின் தேசிய உணவுகளாக விளங்கும் Fondue, Tartiflette, Andouillette, Croissants, Pain au chocolats போன்ற உணவு வகைகள் மீதே இந்தக் குற்றச்சாட்டு விழுந்துள்ளது. அதிக வருமானம் ஈட்டுபவர்கள் சரியான உடற் கட்டமைப்போடு இருப்பதாகவும் 1000 யூரோக்களை விட குறைந்த வருமானம் ஈட்டுபவர்களே அதிக உடற்பருமன் உடையவர்களாக இருப்பதாகவும் ஆய்வு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு






## பதின்மவயது இளைஞனுக்கு 3 மாதச் சிறை!

**தனது** வீட்டு wifi வலைக் கட்டமைப்பிற்கான பெயரை Daesh21 என இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பின் பெயரில் பதிவுசெய்திருந்த பதின்ம வயது இளைஞனுக்கு 3 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது."பயங்கரவாதம் தொடர்பில் எந்த இரக்கமும் கிடையாது ஆனால் Daesh21 என்ற பெயரை மட்டுமே பயன்படுத்தினார்" என இளைஞன் சார்பில் ஆயராகிய சட்டத்தரணி குறிப்பிட்டிருந்தார்.

பிரான்சின் கிழக்கு நகரமான Dijonஇல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. Daesh21 என்ற பெயருடன் ஒரு wifi இணைப்பு காணப்படுவதை அவதானித்த அயல்வீட்டவர் பொலீசாரை அழைத்து முறையிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 100 மணித்தியால கட்டாய சமூக சேவை செய்ய வேண்டுமென்ற நீதிமன்ற கோரிக்கையை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து 3 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## 'உலகின் மிக அழகான வீதி, விலை மிகுந்த வீதி'



"உலகின் மிக அழகான வீதி" உலகின் விலை மிகுந்த வீதிகளில் ஒன்றாகவும் உள்ளது. பிரான்சின் Champs Elysees வீதி உலகின் மிக விலை உயர்ந்த வீதிகளில் மூன்றாவது இடத்தில் உள்ளதாக புதிய ஆய்வில் கூறப்பட்டுள்ளது. இந்த வீதியில் சராசரியாக ஒரு சதுர மீற்றருக்கான வாடகை 13, 255 யூரோவாக உள்ளது.

தொடர்ந்து மூன்று வருடங்களாக நியூயோர்க்கின் 5th Avenue வீதி ஒரு சதுர மீற்றருக்கு 29, 065 யூரோ வாடகையுடன் முதலிடத்தில் உள்ளது. 27, 884 யூரோ வாடகையுடன் இரண்டாவது இடத்தில் கொங்கொங் நாட்டின் Causeway Bay வீதி இருப்பதாகவும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

**நல்லவராய் இருப்பது நல்லதுதான். ஆனால், நல்லது கெட்டது தெரியாத நல்லவராய் இருப்பது ஆபத்தானது!**





# ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் 45வது அதிபர்

**கருத்துக்கணிப்புகள்** எதிர்பார்ப்புகள் என அனைத்தையும் தகர்த்தெறிந்து டொனால்ட் ட்ரம்ப் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் புதிய அதிபராக மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். «Make America Great Again» என்னும் ஒற்றை வாக்கியத்தால் அமெரிக்கர்களைக் கட்டிப்போட்டுவிட்டார்.

அமெரிக்காவில் பல தொழிற்துறைகளில் கொடி கட்டிப்பறக்கும் The Trump Organization, Trump Entertainment Resorts ஆகிய பெருங்குழுமங்களின் தலைவரான டொனால்ட் ட்ரம்பின் புதிய அவதாரம் அமெரிக்காவின் அதிபர். இன்று 70 வயதாகும் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் முதலாவது வயது கூடிய அதிபராவார்.

கட்டிட நிர்மாணம், ரியல் எஸ்டேட் வியாபாரம், விமானப்போக்குவரத்து தொலைக்காட்சி, இதழியல், கசினோக்கள், Trump பல்கலைக்கழகம் என Trumpன் கைபடாத தொழிற்துறையே இல்லைஎனலாம். விளம்பரப்பிரியரான Trump பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தலைகாட்டியுள்ளார். தொடர்ந்து Trump தொகுத்து வழங்கிய தொலைக்காட்சி நிகழ்ச்சியே அவரை மக்கள் மத்தியில் மேலும் பிரபலமாக்கியது. இன்று அமெரிக்காவின் செல்வந்தர்கள் வரிசையில் 113வது இடத்திலுள்ளார்.

World trade Center இன் மீள்கட்டுமானத்திட்டம் ருமேனியத் தலைநகர் Bucarestல் அமைந்துள்ள Palais du Parlement கட்டிடத்தை விலைக்கு எடுத்து உலகத்தின் மிகப்பெரிய கசினோ கட்டுவதற்கான திட்டம் போன்றவையும் Donald Trump இனால் முன்வைக்கப்பட்ட பாரிய திட்டங்களாகும். இத் திட்டங்கள் அந்நாட்டு அரசுகளால் நிராகரிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அரசியல் பிரவேசம்**

ஆரம்பத்தில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரான Donald Trump, 1987ம் ஆண்டு அதிபர் தேர்தலில் போட்டியிட்ட குடியரசுக்கட்சி வேட்பாளரான Ronald Reagan இற்குச் சார்பாக பிரச்சாரத்தில் இறங்கினார். இதுவே அவரின் முதல் அரசியல் பிரவேசமாகக் குறிப்பிடப்படுகின்றது.

- இன்று Donald Trump இனால் முழங்கப்பட்ட கோஷமான «Make America Great Again» என்பது 1987ம் ஆண்டு Ronald Reagan இனால் முன்வைக்கப்பட்ட கோஷம் என்பதும் குறிப்பிடத்தக்கது.
- பின்பு பலமுறை கட்சி மாறி George H.W Bush, George W.Bush என இருவருடனும் மோதி அரசியல் பரப்பில் எதிர்த்து நிற்கமுடியாமல் பின்தள்ளப்பட்டார்.
- 2008 மீண்டும் ஜனநாயகக் கட்சிக்கு மாறி பில் கிளின்டனின் தேர்தல் பிரச்சாரங்களுக்கு நிதி உதவி செய்தார்.
- 2009 மீண்டும் குடியரசுக்கட்சிக்கு மாறினார்.
- 2012 சுயேட்சை வேட்பாளராக அதிபர் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்து பின்னர் குடியரசுக்கட்சி வேட்பாளர் Mitt Romneyஇற்கு ஆதரவு என்பதுடன் விலகிக் கொண்டார்.
- 16 யூன் 2015ல் குடியரசுக்கட்சியின் முதல் சுற்று வேட்பாளராகக் களமிறங்கினார். அன்று Donald Trumpஇன் அறிவிப்பு அமெரிக்கா முதல் உலகநாடுகள் எங்கும் ஒரு நகைச்சுவை நிகழ்வாகவே அவதானிக்கப்பட்டது. எந்தவொரு தேர்தலிலும் பங்குபற்றியிராத Donald Trumpன் வெள்ளை மாளிகை இலட்சியம் இவ்வாறு ஆரம்பமானது.

அதற்குப் பின்னரான 18 மாதங்களும் திரும்பிய பக்கமெல்லாம் Donald Trump தான். தேர்தலுக்கு முதல் நாள் வரை Donald Trump வெல்வதற்கு சாத்தியங்களே இல்லை என்பதே அனைவரின் கருத்தாகவும் இருந்தது. இன்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட அதிபராக ஜனவரி 20ம் திகதி வெள்ளை மாளிகையில் காலடி எடுத்து வைக்கவுள்ளார்.

அமெரிக்க குடியரசுக்கட்சியின் (Partie Républican) முதலாவது அதிபர் என்றால் அது ஆபிரகாம் லிங்கன் ஆவார். இன்று ஆபிரகாம் லிங்கன், ஜோர்ஜ் புஷ் (கள்) வரிசையில் டொனால்ட் ட்ரம்ப் தெரிவாகியுள்ளார்.

270 தொகுதிகளை (Grands électeurs) வென்றாலே போதுமான நிலையில் 278 தொகுதிகளைக் கைப்பற்றி வெற்றியீட்டியுள்ளார். ஹிலாரி கிளிங்டன் 228 தொகுதிகளில் வெற்றியீட்டியுள்ளார். இருப்பினும் வாக்குகள் அடிப்படையில் பார்த்தால் ஹிலாரி கிளிங்டனுக்கே அதிகமான வாக்குகளாகும் (47.78 சதவீதம்) (Donald Trump 47,48 சதவீதம்) ஹிலாரி கிளிங்டன் வென்றிருந்தால் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் 240 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் முதலாவது பெண் அதிபராக இடம்பிடித்திருப்பார்.

**ஒருவர் இன்னொருவருக்கு கற்பிக்கும்போது இருவர் கற்றுக் கொள்கின்றனர்.**


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




# அமெரிக்க அதிபரின் சம்பளம்


- ஒரு அமெரிக்க அதிபரின் வருடாந்த சம்பளம் 368, 000 யூரோக்களாகும். மாதத்திற்கு 30, 660 யூரோக்கள்
- பிரான்ஸ் அதிபரின் சம்பளத்தோடு ஒப்பிட்டால் இரண்டு மடங்கு அதிகமானதாகும். பிரான்ஸ் அதிபர் வருடத்திற்கு 179, 000 யூரோ (Bruts) பெறுகிறார்.
- அமெரிக்க அதிபர் இச்சம்பளத்தை விட Allocation ஆக வருடத்திற்கு 45, 861 யூரோக்களையும் பயணங்களுக்காக 91, 171 யூரோக்கள் பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்காக 17, 424 யூரோக்களையும் பெறுகின்றார்.
- இவை தவிர ஓட்டுனருடன் ஒரு லிமோசின் கார், உலங்கு வானூர்தி ஒன்று, Air Force One விமானம், பாதுகாப்பாளர்கள் மற்றும் ரகசிய பாதுகாப்புப் பிரிவினர், அதிகாரபூர்வ ஓய்வுகளுக்கான தங்குமிடம், வெள்ளை மாளிகை வாடகை, வெள்ளை மாளிகைப் பணியாளர்கள் என அனைத்தும் இலவசம். ஆனால் குடும்பத்தினருக்குத் தேவையான பொருட்கள் மற்றும் கொண்டாட்டங்களை ஒழுங்கு செய்தால் அவரின் சொந்தப்பணத்திலேயே செலவு செய்ய வேண்டும்.
- **ஆட்சிக்காலம் முடிந்ததும்** ஓய்வூதியமாக மாதத்துக்கு 15, 584 யூரோக்களைப் பெறுவார்.
- மருத்துவம் மற்றும் அதிகாரபூர்வ பயணங்கள் இலவசம்
- அவரது வாழ்நாள் முழுவதும் அவருக்கான அலுவலகம், பணியாளர்கள், பாதுகாப்புத்துறையினர், இரகசிய உளவுத்துறையினர் என அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.
- அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஆட்சியில் இருக்கும் காலத்தில் அதிபரின் சம்பளம் கூடவோ குறையவோ எந்தவொரு வாய்ப்புமில்லை
- சம்பளத்தில் மாற்றங்களை ஐக்கிய அமெரிக்கச் சட்டமன்றத்தால் (Congrés des Etats Unis) மட்டுமே கொண்டுவர முடியும்.
- கடைசிச் சம்பள உயர்வு 1999ல் கைச்சாத்திடப்பட்டு 2001ல் அமுலுக்கு வந்தது.
- இதுவரை பில்கிளிங்டன் மட்டுமே இரண்டு மடங்கு உயர்வான சம்பளத்தைப் பெற்றார்.
- இங்கும் அதிபர்களின் வருமானம் மற்றும் சம்பளம் வெவ்வேறானவை. மேற்குறிப்பிட்டவை அனைத்தும் அதிபர் பதவிக்காக வழங்கப்படும் சம்பளமாகும்.
- வருட வருமானமெனில் உதாரணமாக அதிபர் ஒபாமாவின் வருட வருமானம் 725, 000 யூரோக்களாகும். இவை அவர் எழுதிய புத்தக உரிமங்கள் மற்றும் விற்பனையின் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றது. மற்றும் அவரின் தனிப்பட்ட முதலீடுகள் மூலமும் கிடைக்கின்றன. செல்வந்த அமெரிக்க அதிபர்கள் வரிசையில் ஒபாமாவின் இடம் கடைசி வரிசையில் தான் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
- Donald Trump ன் நிலவரம் வேறானது, தற்போதைய கணக்கீட்டின் படி அவரின் சொத்துக்களின் மதிப்பு மட்டும் 2, 66 முதல் 4, 1 மில்லியாட் யூரோக்களாகும்.

## புவி வெப்பமடைதல் ஒப்பந்தம் செப்ரெம்பர் முதல் அமுலில்..

புவி வெப்பமடைதலைத் தடுப்பது தொடர்பில் எட்டப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒப்பந்தம் செப்ரெம்பர் மாதத்திலிருந்து பிரான்சில் அமுலுக்கு வந்துள்ளது. பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைத் தடுப்பதன் மூலம் புவி வெப்பமடைதலைத் தடுப்பதே இந்த ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம். ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஏனைய நாடுகளும் அதன் சரத்துகளை அமுல்படுத்தவேண்டும் என்னும் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையில் பிரான்ஸ் முதலில் காலடி எடுத்துவைத்துள்ளது. 2015இல் கிட்டத்தட்ட 200 நாடுகள் இணைந்து பாரிஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தனர். 15 ஆண்டுகளில் குறிப்பிடும்படியான ஒரு மாற்றம் நிகழவேண்டும் என்பதே இவர்களுடைய எதிர்பார்ப்பு.

1994இல் மறக்கேஸ் (வர்த்தக) உடன்படிக்கை எட்டப்பட்டதன் பின்னர் மிகவும் சிக்கலான அனைத்துலக உடன்படிக்கை இதுவாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## நிலா குறுக்கெழுத்துப் போட்டி – இல. 26




**இடமிருந்து வலம்**

1. திருமணம் செய்து கொள்ளாதவன் (7)
4. தமிழ்நாட்டில் வெளிவரும் ஒரு பத்திரிகை (4)
6. விடிவதற்கு முன் கூவும் சேவலை இவ்வாறு அழைப்பர் (5)
8. தீக்குச்சு, வெடிமருந்து தயாரிக்க உதவும் மூலப்பொருள் (5)
10. வெண்மதி (2)
12. பறவை வகைகளில் ஒன்று (5)
14. கே. பாலச்சந்தரின் இயக்கத்தில் 1981ம் ஆண்டு வெளியான ரஜினிகாந்த் நடித்த திரைப்படம் (6)
15. ஈழத்தில் 1987ம் ஆண்டு ஐந்து அம்சக்கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்த தியாகி (4) குழம்பியுள்ளார்

**மேலிருந்து கீழ்**

1. இசையமைப்பாளரின் நடிப்பில் வெளியாகியுள்ள நான்காவது திரைப்படம் (7)
2. காமதேவனின் மிக அழகான துணைவி (2)
3. கத்தி, அரிவாள் போன்றவற்றை கூர்மையாகத் தீட்ட உதவும் கல் (5)
5. கம்பு, கோல், குச்சி எனவும் சொல்லலாம் (2)
6. அமைதி, இது பெண்களுக்கான பெயரும் கூட (3)
7. மன்மதனை இவ்வாறும் கூறலாம் (4)
8. கல்வியில் கலைகளில் சிறந்தவருக்கு அளிக்கப்படும் கௌரவப்பட்டம் (4)
9. நூறு (3)
10. பௌர்ணமி (4)
11. கலக்கமும், அதிர்ச்சியும் கூடிய உணர்வு (3)
12. விஜய், திரிசா, பிராகாஷ்ராஜின் நடிப்பில் தரணியின் திரைப்படம் (3)
13. தானியங்களை குத்த பயன்படுத்தப்படும் கல் மற்றும் மரத்தினாலான பொருள் (2) குழும்பியுள்ளது
14. அரசன், கணவன் வசிக்கும் இடமென பல பொருள்படும் (2) மாறியுள்ளது

✔ உங்கள் பதில்களை 10 தை 2016 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.25ல் பரிசு பெறுபவர்கள்.

1. தா. ஞானசிங்காரம் - Le Blanc Mesnil
2. சசிகலா சிவசுதக்குருக்கள் - Le Bourget
3. தர்மவாணி ஈஸ்வரநாதன்- Gonesse

**சரியான விடை எழுதியவர்கள் :**

- தர்மகுணம் (Gonesse)
- சிவமணி சுப்ரமணியம் (Bondy)
- ராதா கனகராஜா (Aulnay-sous-Bois)
- தினேஸ் ராஜசிங்கம் (Paris 10)
- ஆர். மைதீபன் (Melun)

**போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !**

இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



Autre Vue
OPTICIEN
Donnez un sens à votre Regard
பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி
இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்
சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான
நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ்
வகைகள் மேலும் பலவிதமான நவீன
கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச
தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள்
விருப்பம் போல் தெரிவு செய்து
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே
நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue
அத்துடன் உங்களுக்கான இலவச
ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.
23 rue lamartine - 75009 PARIS
Tél / Fax : 09 67 33 12 83 - 01 53 20 04 10
email : autrevueparis09@gmail.com
Ouvert du Lundi - Samedi de 10h00 à 20h00
58 AV FLANDRES - 75019 PARIS
Tél / Fax : 09.66.91.54.04 - 01.42.30.54.04
email : autrevueparis19@gmail.com
Ouvert du Lundi - Samedi de 10h00 à 20h00



# ஆச்சரியம், ஆனால் உண்மை!

## பிரான்ஸில் நடைமுறையில் உள்ள விநோதமான சட்டங்கள்....

**பல நாடுகளில்** உள்ளதைப் போன்றே பிரான்சிலும் நடை–முறைச் சாத்தியமே இல்லாத மிகப் பழைமை வாய்ந்த பல சட்டங்கள் தொடர்ந்தும் சட்டப் புத்தகங்களில் உள்ளமை ஆச்சரியம்தான். பாரிஸ் பெண்கள் நீளக்காற்சட்டை அணிவதைத் தடுக்கும் 200 வருட பழைமை வாய்ந்த சட்டம் 2013இல் சட்டத்திலிருந்து நீக்கப்படும் வரை அமுலில் இருந்தது நம்புவதற்கு கஸ்டமாகத்தான் இருக்கிறது. சைக்கிள் அல்லது குதிரை ஓடும் சந்தர்ப்பங்களைத் தவிர பாரிஸ் பெண்கள் நீளக் காற்சட்டை அணிவது சட்டத்தின் படி அதுவரை குற்றமே!

இவ்வாறு தொடர்ந்தும் நடைமுறையில் உள்ள விநோதமான சட்டங்கள்......

- உயிருள்ள நத்தையை அதி வேகத் தொடரூந்தில் கொண்டுசெல்வது சட்டத்திற்கு முரணானது. அவ்வாறு கட்டாயம் கொண்டு செல்லவேண்டுமாயின் அவற்றிற்கும் நீங்கள் பிரயாணப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- தொலைவிலிருந்து இயக்கும் ட்றோன் போன்ற பறக்கும் சாதனங்கள் பறக்க விடப்படுவதோ அல்லது தரையிறக்கப்படுவதோ பிரான்சின் தெற்கே அமைந்துள்ள Chateauneuf-du-Pape எனும் நகரத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. 1954இல் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இனந்தெரியாத பறக்கும் பொருட்கள் (UFO) எதிர்ப்பு சட்டவிதிகளுக்காக பிரான்சின் இந்த நகரம் உலகளவில் அறியப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

- புகையிரதம் அதன் ஓடு பாதைத் தளத்தில்நிற்கும் போது முத்தமிட்டுக்கொள்வது சட்டவிரோதமானது. இவ்வாறு முத்தமிட்டுக்கொண்டிருப்பதால் புகையிரதம் புறப்படுவதில் ஏற்படும் தாமதம் காரணமாகவே இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தது. ஓடுபாதைத் தளத்திற்கு புகையிரதம் வருவதற்கு முன்னர் அனைத்து விதமான முத்தமிடல்களும் முடிக்கப்படவேண்டும் என்கிறது சட்டம்.

- வேண்டுமான அளவு ketchup எடுத்துக்கொள்வது பிரான்சின் பாடசாலை உணவகங்களில் தடை செய்யப்பட்டுள்ளது. ketchup, மயோனைஸ், சலாட்டுக்கான கலவைகள் போன்ற அனைத்தும் நாங்கள் விரும்பிய அளவு பெற்றுக்கொள்வது 2011இலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது. சிறுவர் மத்தியில் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை ஏற்படுத்தவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உணவுப் பழக்கத்தில் பிரான்ஸ் மிக அக்கறையுள்ள நாடாக உலகளவில் கணிக்கப்பட்டாலும் அண்மைய ஆய்வு அதிர்ச்சியளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

- தனியார் வானொலிகளில் ஒலிபரப்பாகும் பாடல்களில் 40 வீதமானவை பிரான்சைப் பூர்வீகமாகக் கொண்ட பாடல்களாக இருக்கவேண்டும். அதை விடவும் ஒலிபரப்பாகும் 40 வீதத்தில் அரைவாசி குறைந்தது 6 மாத பழைமையான பாடல்களாக இருக்க வேண்டும். பிரான்சின் பாரம்பரிய இசையை நிலைக்க வைப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

- பன்றி வளர்ப்பவர்கள் தங்கள் பன்றிக்கு நெப்போலியன் என செல்லப்பெயர் வைக்கமுடியாது. மாவீரன் நெப்போலியனால் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தான் கிண்டல் செய்யப்படுவதை அல்லது அவமானப்படுத்தப்படுவதைத் தவிர்க்கவே இச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

- ஆகக் குறைந்த மரியாதையேனும் கட்டாயம் வழங்கப்படவேண்டியது முக்கிய சட்டமாகவுள்ளது. வடக்கு பிரான்சில் உள்ள Lhéraule எனும் கிராமத்திலேயே இந்தச் சட்டம் அமுலில் உள்ளது. நகர சபை மண்டபத்துள் செல்லும் ஒருவர் வணக்கம், நன்றி போன்ற அடிப்படை பண்புகளைப் பின்பற்றத் தவறினால் வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றப்படலாம்.

- வைன், பியர், சீத்ர், hydromel எனப்படும் புளிக்கவைக்கப்பட்ட தேன்பானம் போன்றவை தவிர ஏனைய மதுபானங்கள் வேலை இடங்களில் அருந்துவது சட்டவிரோதமானது. வேலை முடிந்தபின் வேலை இடத்தில் மது அருந்துவதும் கூட சட்டத்தின் படி தடையே.

- இறந்த ஒருவரைத் திருமணம் செய்வதை சட்டம் ஏற்றுக்கொள்கின்றது. 1959இல் பிரான்சில் அணை உடைக்கப்பட்ட சம்பவத்தில் 420 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்த சட்டம் மீண்டும் துளிர்விட்டது. சம்பவத்தில் காதலனை பறிகொடுத்த கர்ப்பிணிப் பெண்ணின் நிலை எல்லோரது மனங்களையும் உருக வைத்திருந்தது. இதைத் தொடர்ந்து அப்போதைய அதிபராக இருந்த சார்ள்ஸ்டுகோல் காதலன் இறந்துவிட்டாலும் கூட அவர்கள் திருமணம் செய்துகொள்வதற்கு அனுமதியளிக்கும் சட்டத்தை அமுல்படுத்தியிருந்தார்.

- தங்கள் பிள்ளைகள் திருமணம் செய்துகொள்வதை பிரான்ஸ் நாட்டுப் பெற்றோர்கள் தடுக்கலாம். நெப்போலியனின் ஆட்சிக்காலத்தில் இது சட்டமாக்கப்பட்டுள்ளது. காரணத்தைத் தெரிவித்து அவர்கள் சட்டத்தில் முறையிடலாம்.

- பிரான்ஸ் மன்னர் குதிரையில் வீதியால் செல்லும்போது மக்கள் எல்லோரும் கட்டாயம் வீட்டுக்குள் இருக்கவேண்டும் என்பதும் ஒரு சட்டம். தற்போது பிரான்சில் மன்னரும் இல்லை பிரான்ஸ் அதிபர் குதிரையில் செல்வதும் இல்லை. ஆனால் சட்டம் இன்னமும் உள்ளது.

- ஒரு பெண், ஆண் போன்று உடையணிவதற்கு பொலீஸாரிடமிருந்து அனுமதிபெற்றிருக்கவேண்டும். இதனால்தான் கடும் குளிரிலும் அன்றை நாட்களில் பெண்கள் பாவாடை சட்டை அணிந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

- குப்பைக் கூடைகளும், ashtrayகளும் சட்டத்தின் படி அபாயகரமான ஆயுதங்கள் என்ற பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.


# சங்கீதா அச்சகம்

லாச்சப்பலில்!
புதிய சேவைகளுடன்!!

புத்தாண்டில் உங்கள் அன்பிற்கினியவர்களுக்கு
அன்பு கலந்த அன்பளிப்புகளை பரிசளிக்க
சங்கீதா அச்சகத்தை நாடுங்கள்..!!!




**39, Boulevard de La Chapelle 75010 Paris**



# Vive le Bataclan

13 நவம்பர் 2015 துயர நினைவுகளுடன் பிரான்ஸ் சரித்திரத்தில் பதிவாகிப்போன Bataclan இசையரங்கம் மீண்டும் தனது பணியைத் தொடங்குகிறது.

அதிகாரபூர்வமான முதல் இசை நிகழ்வு 16 நவம்பர் அன்று இங்கிலாந்தைச் சேர்ந்த Rock இசைப்பாடகரான Pete Doherty ன் இசை– யோடு ஆரம்பமாகியது. அறிவிக்கப்பட்ட ஒரு சில மணிநேரங்களிலேயே அனைத்து நுழைவுச்சீட்டுகளும் விற்றுத் தீர்ந்து விட்டன. அவரைத் தொடர்ந்து செனகலின் ஒப்பற்ற இசைக்கலைஞனான Youssou N'Dour என இந்த வருட இறுதிக்குள் 10 இற்கும் மேற்பட்ட இசை நிகழ்வுகளால் Bataclan தனது துயர நாட்களை மெல்ல மெல்ல மறக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

12 நவம்பரில் நடைபெற்ற மீள் அங்குரார்ப்பண நிகழ்வு பிரபல பாடகர் Sting ன் இசையுடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்வுக்கான நுழைவுச்சீட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டாலும் பெரும்பாலான இருக்கைகள் அதிகாரபூர்வ அமர்வாளர்களுக்காக ஒதுக்கப்பட்டது. தாக்குதலில் பாதிப்புக்குள்ளானோரின் குடும்பத்தினர் ஒரு நினைவுகூரலாக இந்நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர். 1500 பார்வையாளர்களில் 500 பேர் உயிர்தப்பியவர்களும் அவர்களின் குடும்பத்தினர்களுமாவர். அதிபர் பிரான்சுவா ஹொலந்த் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் அந்தரங்கம் கருதி இந்நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. 13ம் திகதி பாரிஸ் மாநகர மேயர் ஆன் கிடல்கோவும், அதிபர் பிரான்சுவா ஹொலந்தும் தாக்குதல்கள் நடைபெற்ற அனைத்து இடங்களிலும் நினைவஞ்சலியையும், இறந்தவர்களின் பெயர் பதித்த தகடுகளையும் திறந்து வைத்து மரியாதை செலுத்தினர்.

முற்றாக மீள் நிர்மாணிக்கப்பட்டு இசையரங்கின் உட்பகுதி பிரான்ஸ் தேசியகொடியின் வர்ணங்களில் வர்ணம் பூசப்பட்டு பழைய அரங்கை ஞாபகப்படுத்தாத வகையில் மாற்றியமைக் கப்பட்டிருந்தது. ஒரு நிமிட மௌன அஞ்சலிக்குப் பின்னர் ஆரம்பமாகிய இசை நிகழ்வு "நாங்கள் எவ்வளவு பலவீனமானவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது" எனும் பாடலுடன் அரங்கம் நிறைந்த கண்ணீருடன் ஆரம்பித்து மெது மெதுவாக மாற்றம் பெற்று துள்ளலுடனும் குதூகலத்துடனும் Vive le Bataclan எனும் கோஷங்களுடன் நீண்ட கரகோஷ ங்களுடனும் நிறைவு பெற்றது.

## ■ தங்கள் நாடு பிழையான பாதையில் செல்வதாக பிரான்ஸ் நாட்டவர்களே அதிகம் கவலைகொள்கிறார்கள்.

88 வீதமான மக்கள் இவ்வாறு கவலை கொள்கின்றனர்.



இத்தாலி நாட்டவர்களுள் 83 வீதமானவர்களும், ஸ்பெயின் நாட்டவர்களுள் 82 வீதமானவர்களும், சுவீடன் நாட்டவர்களுள் 73வீதமானவர்களும், ஜேர்மனி நாட்டவர்களுள் 71வீதமானவர்களும், அமெரிக்கா நாட்டவர்களுள் 64வீதமானவர்களும் ஐக்கிய இராச்சிய மக்களுள் 56 வீதமானோரும் இவ்வாறு கவலை கொள்கின்றனர். ஒட்டுமொத்த உலக வாழ் மக்களில் சராசரியாக 62 வீதமான மக்கள் ஒத்த கருத்தையே கொண்டிருக் கின்றார்கள்.

வளர்ந்துசெல்லும் வேலைவாய்ப்பின்மை, சிறுபராய உடற்பருமன், தீவிரவாதம், சட்டவிரோத குடியேற்றங்கள் போன்ற பல காரணிகள் இவர்களின் அவநம்பிக்கைக்கு காரணமாய் அமைகின்றன.

ஆனாலும் ரஷ்யா, இந்தியா, சவுதி அரேபியா, சீனா ஆகிய நாட்டு மக்கள் தங்கள் நாடு சரியான பாதையில் செல்வதாக கருத்து தெரிவித்துள்ளனர். சீனாவில் 90 வீதமான சரியான பாதையில் செல்கின்றது என்ற கருத்தை வெளியிட்டுள்ளனர்.




# அதிபர் பிரான்சுவா ஹொலந்த் மீதான தாக்குதல்களை நிறுத்துங்கள்!




## 60 பிரமுகர்கள் கூட்டறிக்கை!

**ஆட்சிக்கு வந்த காலம் முதல்** பல வழிகளிலும் விமர்சனங்களுக்கு முகம்கொடுத்து வந்தவர் அதிபர் பிரான்சுவா ஹொலந்த். சிறப்பான ஆட்சியாளர் என ஏனைய நாட்டு அரசியல் தலைவர்களாலும், விமர்சகர்களாலும் பெருமைப்படுத்தப்பட்டு வந்தாலும் பிரான்சின் கருத்துக்கணிப்புகள் ஒருபோதும் இக்கூற்றைப் பிரதிபலித்ததில்லை.

"கடந்த நான்கு ஆண்டுகளில் பிரான்சில் ஏற்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் சர்வதேச நெருக்கடிகள் என்பவற்றை அதிபர் சிறப்பாகக் கையாண்டிருக்கிறார். இருப்பினும் அதிபர் மீது வைக்கப்படும் தொடர் எதிர்வினைகள் அவர் இதுவரை காலமும் பிரான்சுக்கும் பிரான்ஸ் மக்களுக்கும் ஆற்றிய நற்பணிகளை புறக்கணித்து விடுகின்றன" என பிரான்சின் கலைஞர்கள், விளையாட்டுத் துறையினர், உயர் அதிகாரிகள், சிந்தனையாளர்கள், கல்வியாளர்கள், தொழிற்துறையினர் என 60 பேர் அதிபர் பிரான்சுவா ஹொலந்திற்கு ஆதரவாகக் குரலெழுப்பியுள்ளனர். அவர்களால் கையொப்பமிடப்பட்டு 'Stop au Hollande - bashing' அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

- பிரான்சில் 2011ல் வரவு செலவு பற்றாக்குறையான 5.1 சதவீதம் இன்று 3.5 சதவீதமாக மாற்றம் பெற்றுள்ளது.
- வரிக்குறைப்பு, கொள்வனவுத் திறன் அதிகரிப்பு
- கல்வித் துறையில் அதிகரிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள்
- காவற்றுறை மற்றும், நீதித்துறைக்கு கூடுதல் நியமனங்கள்
- இளம் சமூகத்தினருக்கான தொழிற்றுறைக் கல்வி
- அனைவருக்குமான Complémentaire Sante
- அனைவருக்குமான Tiers payant
- நீண்டகாலச் சேவையாளர்களுக்கு 60 வயதில் ஓய்வூதியம்
- கல்வித்துறை மறுசீரமைப்பு
- ஒரு பாலினத் திருமணச் சட்ட மூலம்
- தொழிற்றுறையில் ஆண் – பெண் சமத்துவம்
- இலவசக் கருத்தடை என பெண்களுக்குச் சார்பான

இன்னும் பல புதிய திட்டங்கள் என அதிபரின் சாதனைகளை அறிக்கை பட்டியலிட்டுள்ளது.

தேவையற்ற வதந்திகள் விமர்சனங்கள் எனத் தொடரும் தாக்குதல்களை நிறுத்துங்கள்! அவரவர் அரசியல் நலன்களுக்காக ஒரு நாட்டின் அதிபரை மூர்க்கத்தனமாக விமர்சிப்பது ஜனநாயகம் ஆகாது எனவும் அறிக்கை காட்டமாக தெரிவித்துள்ளது.

இது ஒரு ஆரம்பமே! இன்னும் பலர் இவ்வறிக்கையில் கையொப்பமிட ஆர்வமாக உள்ளனர். பிரான்சுவா ஹொலந்தை எமது நாட்டின் குடிமகனாக எமது நாட்டின் அதிபராக மதிக்க வேண்டியது பிரான்ஸ் மக்கள் ஒவ்வொருவரது கடமையுமாகும் என அறிக்கை மேலும் சுட்டியுள்ளது.

**2017 கலண்டர்களுக்கு முன்பதிவு செய்து கொள்ளுங்கள்!**
சங்கீதா அச்சகம் : 01 44 72 08 94

Gooday Centre de Beauté


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# பிரான்சின் குளிர்கால ஒப்பந்தம்

பிரான்சின் குளிர்கால ஒப்பந்தம் நவம்பர் 1ம் திகதி ஆரம்பித்துள்ளது. பிரான்சில் வாழும் பல ஆயிரக்கணக்கான மக்கள் மீது ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் இந்த ஒப்பந்தம் ஒக்ரோபர் 31 நள்ளிரவில் ஆரம்பித்து அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கும். இந்த ஒப்பந்தம் போர்க்களத்தில் இராணுவங்களுக்கிடையிலோ, அரசியல் கட்சிகளுக்கிடையிலானதோ போன்றதல்ல. முக்கியமாக வீட்டு உரிமையாளர்களுக்கும் வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்கும் இடையிலானது. எந்தக் காரணம் கொண்டும் வீட்டு உரிமையாளர்கள் வாடகைக்கு இருப்பவர்களை வீட்டை விட்டு வெளியேற்ற முடியாது.

இந்த ஒப்பந்தம் முடியும் நேரத்தில் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 40000 பேர் வீட்டை விட்டு வெளியேற்றப்படுவதாக புள்ளிவிபரம் ஒன்று குறிப்பிடுகின்றது. வாடகை கட்டாவிட்டாலோ வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் 5 மாதங்களின் பின்னரே நடவடிக்கை எடுக்கமுடியும். குளிர்காலத்தில் வீடுகளற்ற நிலையில் வீதிகளில் மக்கள் உறங்கும் நிலை வரக்கூடாது என்பதை உறுதிப்படுத்தும் மனிதாபிமான நடவடிக்கையாகவே இந்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது.

# பிராந்திய அழகி, பட்டம் இழக்கிறார்




பிரான்சில் பிராந்தியங்கள் ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட அழகிகளில் ஒருவரின் "அழகி" பட்டம் பறிக்கப்பட்டுள்ளது. Centre-Val-de-Loire பிராந்தியத்திற்கான அழகியாக தெரிவுசெய்யப்பட்ட Margaux Legrand என்பவரின் அழகி பட்டமே மீளப் பெறப்பட்டுள்ளது. மிக முக்கிய விதியை மீறினாரென்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்தே நிர்வாகக் குழுவினரால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் அழகியாக போட்டியிடும் பெண்களுக்கான மிக முக்கிய விதிகளில் ஒன்று அவர்கள் ஆபாசமான புகைப்படப்பிடிப்புக்களில் ஒருபோதும் ஈடுபட்டிருக்கக் கூடாது என்பது. முடி சூட்டப்பட்டு ஒரு மாதம்கூட ஆகாத நிலையில் Miss France 2016 என்ற பட்டத்தைப் பெறும் வாய்ப்பை இழந்துள்ளார்.

பல வருடங்களுக்கு முன்னர் இவர் அரை நிர்வாணமாக புகைப்படப்பிடிப்பில் ஈடுபட்டுள்ளார். பிரான்ஸ் அழகிப் போட்டியை நடாத்தும் நிர்வாகத்தினருக்கு இனந்தெரியாதவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட இவரது அரை நிர்வாணப் படங்களால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் அழகிப் போட்டியில் பங்கேற்கும் இலட்சியம் ஏற்படுவதற்கு முன்னர் இந்தப் படப்பிடிப்பில் தான் ஈடுபட்டிருந்ததாக Legrand கூறியுள்ளார். 2013இல் 'Miss Roussillon' ஆகத் தெரிவுசெய்யப்பட்ட Norma Julia என்பவரது பட்டமும் 2011 பிரான்ஸ் அழகி என்ற பட்டத்தை வென்றிருந்த Laury Thilleman என்பவரது பட்டமும் அரை நிர்வாணமாக புகைப்படப்பிடிப்பில் ஈடுபட்டதைத் தொடர்ந்து பறிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




இலங்கை தமிழ் பழையமாணவர் ஒன்றியம்
www.uaets-france.fr
கணக்கு விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.

நிலா
நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

**சங்கீதா அச்சகம்**
39, Bld. de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை -பாரிஸ் 17**

Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**யாழ் இறைச்சிக்கடை**
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

**ராக ஜோதி மளிகை**
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

**மாயவர் - மொழிபெயர்ப்பு**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

**தமிழாலயம்**
19, Rue Cail, 75010 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**அறிவாலயம் புத்தகசாலை**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

**Karan Coiffure**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

**ஞானமணி பல்பொருள் அங்காடி**
218, Rue. Anatole Francy - 93 Drancy

mk;ghs; ];Nuh];
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்**
Le Blanc Mesnil (93), Clichy (92)

**அஷ்டலக்சுமி கோயில்**
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

Sagana Coiffure
64, Rue Louis Blanc (M°: La Chapelle)

**சிவன் கோயில்**
La Courneuve

ROYAL MAHAL
212, Ave. 8 Mai 1945 - Le Blanc Mesnil

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Pari

தீவக செய்திகளை அறிய..
www.Allaiyoor.com

